உ

சிவமயம்



# கந்தவனக் கலம்பகம்

ஆசிரியர்;

**திரு. கா. கோ. வேங்கடராமன், எம். ஏ.**

தமிழ்த்துணைப் பேராசிரியர்,

அரசினர் கலைக்கல்லூரி,

திருவண்ணாமலை,

தமிழ்நாடு.

உ



# கந்தவனக் கலம்பகம்

பொலிகண்டி கந்தவனக்கடவை

வள்ளி தேவசேனா சமேத

ஸ்ரீ கலியாண வேலன்

திருவடிக்கு

சமர்ப்பணம்.

ஆசிரியர்;

திரு. கா. கோ. வேங்கடராமன், எம். ஏ.

தமிழ்த்துணைப் பேராசிரியர்,

அரசினர் கலைக்கல்லூரி,

திருவண்ணாமலை,

தமிழ்நாடு.

ஸ்ரீ தையல்நாயகி அச்சகம், யசழ்ப்பாணம்.

# கல்யாண வேலன்



சிறு பிரபந்தங்களில் கலக்கலப்பான ஓசைநயங் குலுங்குவது இயல்பு; செறிவாகப் பாடும் சங்கத் தமிழையும் தமிழ் மாலை வளர்ந்த பக்தித் தமிழையும் அடுத்து இடைக்காலத்தமிழ் பல்வகை யாப்பு மேவி மிளிர்வது தமிழுக்கு நலமேயாகின்றது. சங்கத் தமிழ் மரபில் கருத்து நுட்பத்தைக் காண்கிறோம். இடைக்காலத் தமிழில் கருத்துக்குத் தரும் மொழியுருவத்தைச் சிறப்பு நோக்கோடு படைத்துக் கொண்ட புலவர் மரபைக் காண்கிறோம். இவ்வளர்ச்சியை 'ஒளவைகை முன்னேற்றம்' என்னும் கட்டுரையில் பெருந்தகை மு. வ. கூறிச் சென்றார்.

கந்தவனக கந்தன் அருளைப் பாடும் இந்நூலாசிரியர், ''வருமுகில் வழியே பற்றிவளர் நிழல் செல்லுமாப்போல்'' முருகன் அருள் நோக்கில் அடியார் மனம் முகிழ்ப்பதைப் பேசுவது நயமிக்கது. படைவீடாம் குன்று விட்டுக் குமரன் பக்தர் மனதில் இடம் பெறுவதை,

'குன்று விட்டெம்முளம்
குடிபுகுந் தோயே''

என்கிறார் புலவர். நேர்க்காந்தத்தை எதிர்க்காந்தம் இழுப்பது போல் உலகியல்வழி வாழ்வைத் தன் பக்கம் ஈர்த்து அன்பரைக் கந்தன் காப்பது பற்றிய கருத்து சுவையானது பாக்களின் ஓசை நயம் பலவிடங்களில் இனிதாயுள்ளது. சான்றாக,

''சங்கினம் ஒலிக்கத் தெங்கினம் சிரிக்கும்
பைங்கிளியொடு குயில் பண்ணிசை பாடும்
கந்தவனங்களி தந்திடும் முருகா!''

எனவரும் பகுதியைக் குறிக்கலாம். அஷ்டப் பிரபந்தம் போன்ற நூல்களில் பல பாக்கள் மடக்கு அணியமையச் சிறப்பாக காண்கின்றோம். இந்நூலாசிரியர்,

''மன்றுளான் கருதாமொழி தந்தான்
வானுளார் சிறை தாமொழி தந்தான்''

என்று பாடும் வாய்ப்பில் முருகன் தந்தைக்கு மறைமொழி விளக்கிய திறத்தையும் (கருதா - மொழிதந்தான்) வானவரைச் சிறைமீட்ட திறத்தையும் (சிறைதாம் - ஒழிதந்தான்) அழகுறப் பாவாக்கி விட்டார். கண்டிச் சோலை மகிழ் கந்தனை,

"..............கடலோ
அலைக்கையால் வெங்கவரி வீசி மெலியாமல்
கலக்கறவே நின்புகழைக் காதினிக்கவே பாடும்"

என்றிசைத்துத் தம் கற்பனையைக்கவிஞர் புலனாக்குகின்றார். தாமே தம்மைக் குறித்ததுபோல் "வெள்ளை மனத்திரு வேங்கடராமன்" மேலும் பல நூல்கள் படைத்துத் தமிழுலகுக்குத் தக்க பணி யாற்ற முற்படுவாரென நம்பி அவரை மனமார வாழ்த்துகின்றேன்; தமிழ் முருகன் தன்னருள் பெற்று வாழ்க! வளர்க!!

சி. பாலசுப்பிரமணியன்
20-2-80

# உரைப்பாயிரம்

'உலகவிர் ஞாயிறு கிழக்கெழுந்தாங்குப்' பொலியும் சேயோன், இன்றமிழ் முழங்கும் ஈழவடகரையினர்க்கு இன்ன முதமேயெனப் பொலிசண்டிச் சோலைக் கந்தவனத்தில் நிலை கொண்டிருந்து, மேலவர்ப் பணித்தும், ஆர்வலர்ப் புரந்தும் தலையளி செய்து மகிழ்குவன். தன் திறம்பாடிட எனை ஏவல் கொண்ட அன்னோன் அருள், மென்மேலும் சிறந்து தண்டமிழ் மாந்தர்க்குத் தனிமகிழ்வு தருவதாக!

மூதறிவும் முந்துதமிழ்ப் புலமையும் ஆலமர் செல்வன் அடிமலர் பரவும் முறைமையும் கொண்ட ஈழத்தறிஞர் திக்கம் செல்லையாவைத் தமிழ்கூறு நல்லுலகில் தெரியாதார் இலை எனலாம். அவர் குடும்பத்தாரும் அறங்கடைப்பிடித்த கொடை நலமுடையராய்க் கந்தவன முருகன் கடைக்கண் நோக்கில் திளைக்கும் திருவினராய்த் திகழ்கின்றனர். தம்மைப் புரக்கும் கந்த வனத்தானுக்குக் கற்கோயில் புதுக்கும் கடமை மேற்கொண்ட தோடு, சொற்கோயில் ஒன்றும் செய்விக்க அவாவினராய், ஈழப்பயணம் போந்த எம்மை, அன்போடு உசாவி அருவிருந் தூட்டி மனங்கனிந்துருகிட மாயோன் மருகற்கு நற்றமிழ் இலக் கியமொன்று நாட்டுக என்றனர். திக்கம் செல்லையாவின் மூத்த மகளாரும் முதுதமிழ்ப் புலமை மூதறிவாட்டியாருமாகிய அன்னை திருமதி. குமாரசுவாமியாரின் இவ்வேண்டுகோளினைத் தலைக் கொண்டு, வேலோன் புகழினை விழுமிதின் வாழ்த்திக் கந்தவனக் கலம்பகம் கண்டனென். இக்கலம்பகத்துக் குறையிருப்பின் சிற் றறிவுடையேன் செய்பிழையென்றும் நிறைததும்பின் பிறைதலைக் கணிந்த கறைமிடற்றண்ணல் அருளிய முருகன் திருவருட்டிற மென்றும் கொள்க.

கடலலையோசை, கவினமர் புள்ளிசை, மடவரல் மகளிர் வாய்தரு பண்கள் ஆகியவை நற்றவர் முழக்கொடு நனிவிர விடப், பொறியறை இருப்பையும் செறிசுவைப் பலாவும் தென் னையஞ் சோலையும் தண்ணறும புதலும் செழிப்புடன் வளரும் வெயினுழைபறியாக் குயினுழை பொதுபர் நாப்பண், அருட் கதிர் பரப்பி இடுக்கண் விலக்கிடும் அஞ்சுடர் வேலோனின் அழகிய கோயில் துலங்குகிறது. அறுபடைவீடு கொண்ட செவ்

வேட்குக் கலையழகு மிக்க இக்கந்தவனம் ஏழாவது பாடிவீடா கும் இயல்பிற்று என்பதனைக் 'கந்தவனமும் பாடி ஆடாமோ ஊசல்' என்ற தொடர் (கந்தவனக் கலம்பகம் 7) சுட்டும். கந்த வனத்தில் தெய்வத் தன்மை பொருந்திய இருப்பை மரமுள்ள மையைத் 'தென்னிளஞ் சோலை இருப்பை விரும்பிடு சீராய்' (கந்தவனக் கலம்பகம் 50) என்ற தொடரும் நோய்தீர்க்கும் ஊற்று ஆண்டு உண்டு என்பதனை 'ஊற்றினிலே நோயழிக்கும் உள்வீதிச் சிறப்புடைய ஓரழகன்' (கந்தவனக் கலம்பகம் 14) என்ற தொடரும் தெரிப்பன. மடியும் மிடியும் போக்கி, வள ரும் உளமும் சிறக்கச் செய்யும் வள்ளலாம் முருகனைப்பற்றிய இக்கந்தவனம் வேலோன் அடிபோற்றும் விழுமியோர்க்குப் பெரி தும் பயன்படுமெனக் கருதுகிறேன்.

குடமுழுக்காட்டு மலராய்க் 'கந்தவனக் கலம்பகம்' வெளி வர முதற்காரணமாயமைந்தவர்கள் திக்கம் செல்லையா அவர் களின் மக்கள் திருமதி. குமாரசுவாமி, திரு. யோகேந்திரன், செல்வி. ருயர், செல்வி. சிவா ஆகியோர். அன்னோர்க்கும் இலங் கைப் பயணத்தின்போது எங்கட்கு வழிகாட்டிய திரு. சிவலிங் கத்திற்கும் பெரிதும் நன்றியுடையேன். 1979 ஆம் ஆண்டில் என்னோடு இலங்கைப் பயணம் மேற்கொண்டு இக்கலம்பகம் எழ உதவிய திரு. V. சுப்பிரமணியன் M. A. B. Lib. Sc; திருமதி. சு. சாரதா, திரு. பெஞ்சமின் M. A. B. Ed; திரு. ப. ஆறுமுகம் M. A, B T; திருமதி. ஆ. மரகதம், திரு. பரந்தா மன் M. Sc; திருமதி. ப. கிரிஜா M. A. B. T; திரு. அர. மணி வாசகம் M. A, திரு. வேம்பையன் M. Sc ஆகியோர்க்கு என் மனமார்ந்த நன்றி உளவாகுக! இவர்களுள்ளும் எனக்கு உற்ற துணையாயிருந்து என்னை அவ்வப்போது தூண்டிவிட்டுக் கலம்பகம் இயற்றப் பெருந்துணையாய் அமைந்த திரு. பெஞ்சமின் அவர் கட்குத் தனிப்பட்ட முறையில் மீண்டும் நன்றி பகர்வன். எற்கு நெறிகாட்டியமைந்த ஆங்கிலப்பேராசிரியர் திரு. பெ. சுப்பிரமணி யன் M. A, B. O. L; அவர்க்கட்கும் நன்றி கூறும் கடப்பாடு டையேன்.

தமிழன்னையின் தவமைந்தராம் சென்னைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர். சி. பாலசுப்பிரமணியனார் M. A, M. Litt, Ph. D; அவர்கட்கு மனமார்ந்த நன்றியன்.

'கலம்பக வழிகாட்டி' என்று தலைப்பிட்டு அணிந்துரை அளித்துதவிய அருந்தமிழ் ஆய்வறிஞர் அண்ணல் திரு. ப. ஆறுமுகனார்க்கு மீண்டுமொருமுறை நன்றி தெரிவிக்கின்றேன்.

தமிழ்ப் பாவலருள் யானும் ஒருவன் என அறிவித்தற்கே துவாய இக்கலம்பகம் யாத்திடப், பல்லாற்றானும் உதவி புரிந்த அனைவர்க்கும் யானும் என் துணைவி திருமதி சாரதா B. Sc, B. Ed. உம் மிகவும் அன்பும் நன்றியும் உடையேம்.

ஈழத்தோடு எனை இணைத்து இயலிசைக் கலம்பகம் செய்யக் கடைக்கணித்த சந்தவனத்தான், தமிழும் தமிழரும் தழைத் தினிதோங்கிடத் தண்ணருள் புரிவானாக!

கா. கோ. வேங்கடராமன்.
25-5-81

# வாழ்த்துரை

**டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட். , பிஎச். டி.**
தமிழ்த்துறைப் பேராசிரியர் - தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழ்த் தெய்வமாம் முருகனைப் போற்றிப் புனையப்பட்ட 'கந்தவனக் கலம்பகம்' மரபுவழி நடைபோடும் சிறந்த பனுவல்' இக்கலம்பகத்தின் ஆசிரியர் கவிஞர் கா. கோ. வேங்கடராமன் சொற்பொருணயங்கள் பொதிந்து பாடுவதில் வல்லவர். இந்நூல் தமிழ்ச் சுவைஞர்க்கும் முருகனடியார்க்கும் நல்விருந்தாகும்.

முருகனை அருணகிரிநாதர், ''முத்தமிழ் அடைவினை' என்று பாடினார். இம்மரபு வழுவாமல் இந்நூலாசிரியர், ''முதிர் தமிழ் இனமொழி முழுதுணர் மனமொடு முழுகிடும் மகிழ்வுறும் முருக'' என்று தமிழையும் முருகனையும் இணைத்துப் பாடுகின்றார். இந்நூற் புலவர் பிரபந்தப் படைப்பாக நூலைப் பாடியமை யால் இவர்தம் தமிழ்நூற் பயிற்சி நன்கு வெளிப்படுகின்றது. ''ஏர்தரும் இருவிழியே எனையிடர் செய்தவையே'' என்று வரும் பாடல்,

''எழுதருமின்னிடையே எனையிடர் செய்தவையே'' எனவரும் சிலப்பதிகாரக் கானல்வரிப் பாடலின் எதிரொலியா கின்றது. அஃதேபோல்,

''அன்னை கேட்கின் யாங்ஙனம் சொல்வேன் ஆருயிரே'' என்னும் அடி, ''அன்னையறியின் என்செய்கோ' என்றொலிக்கும் குரலாகின்றது; சிலம்பின் பரலாகின்றது. முருகனைப் பாடும் இப்புலவர் மரபை நன்கறிந்தவர்; சான்றாக. ''கங்கைச் சுழல் தவழ்ந்தோனே'' என்று பாடுகின்றார். 'காங்கேயன்' எனும் பெயர் விளக்கம் நினைந்து நாம் மகிழ்கின்றோம். சரவணப் பொய் கையில் தோற்றமெடுத்த முருகனை, ''தாமரைப்பாயல் தழுவிய முருகே'' என்று நயமுற அழைக்கின்றார். நற்றமிழ் குழைக்கின் றார்; மரபுப் புலமையை நூலில் இழைக்கின்றார்.

ஞான பண்டிதனும் முருகனை, ''புலமை கொண்ட நெஞ்சனே'' எனப் புனைந்து பூரிக்கின்றார்.

# கலம்பக வழிகாட்டி

ப. ஆறுமுகம், (M. A., B. T. Ph. D.)
சென்னைப் பல்கலைக்கழகம்.

ஒண்டமிழ் ஆய்ந்த செந்தமிழ்ப் பாவலருள் ஒப்பற்ற திற னாய்வாளராகவும் இறைவன் பாடலையும் திறனாய்ந்து "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று நேருக்கு நேர் உரைத்த ஆற்றலரசாகவும் விளங்கிய புலவரரசு, நக்கீர்

உலக முவப்ப வலனேர்பு திகழ்தரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்.

திருப்புகழ் பாடிப் பரவுவர், செந்தமிழ் மறவர் சிந்தை யில் போற்றும் செவ்வேளை, எழுஞாயிறனையான் எழிலும் அருளும் அன்பும் பெருமையும் போற்றும் தமிழ் இலக்கியப் பாயிரமாக அமைகிறது இது.

**யாஅம் இரப்பவை**

பொருளும் பொன்னும் போகமும் அல்லநின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே (பரிபாடல் 5)

என்று கடுவன் இளவெயினர், அறுவர் பயந்த ஆறமர் செல்வனை இமயக்குன்றம் நிகர்க்கும் பரங்குன்றினைத் தண்பரங்குன் றமர்ந்த தமிழ் கெழு கடவுளைப் பரிபாடலால் பரிந்து பரிந்து உருகி உருகிப் போற்றிடுவர். நல்லந்துவனும், குன்றம் பூதனும், நல்லழிசியாரும், நப்பண்ணனாரும், நல்லச்சுதனாரும் செவ்வேள் பொழி திருவைத் தெள்ளுதமிழில் வாரிவழங்கினர் பரிபாடல் எனும் இசைப்பாடல் உருவில்.

சங்கத் தொகை நூல்கட்டு வாழ்த்து வழங்கிய வண்டமிழ் வேந்து-பாரதம் பாடிய பெருந்தேவனார், நல்ல குறுந்தொகைக்கு, குறிஞ்சிச் செல்வன், குன்று கெழு நாடன் குவலயம் காக்கும்

கொடை போற்றி அளித்தபாடல் தமிழ் இலக்கியத்தில் குற்றமில் நற்றமிழ்ப் பாடல் என்று போற்றிப் பரவுவார் கதிரேசன் செட்டியார்.

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்றா லுலகே

அடியையும், மேனியையும், ஒளியையும், உடுக்கையையும், வேலையும், வேற்கொடியையுமுடைய செவ்வேள் காப்ப உலகம் ஏமவைகலை எய்திற்று என்பர் புலவர். இத்தகைய கடவுள் வாழ்த்தெனும் புறப்பொருள் பாடாண் திணைப்பாக்கள், சிலம்பில் குன்றக் குறவையாக வளர்ந்துள்ளமை காணலாம்.

இயற்கையும் செயற்கையும் இணைந்துடற்றிய இன்னல்களையும் அழகன் இறையருள் வேட்கும் எழில்மிகு பாடல்களைத் தமிழ் மக்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாப் பொருளாக்கு இழப்பில் ஆழ்த்திய கொடுமையை எம் தமிழ் நாட்டு வரலாறு காட்டிக் காட்டித் துன்பக் கடலுள் ஆழ்த்தியவண்ணமுள்ளது. கந்தன் கருணையை கைபுனைந்தியறு அக்கவின் பெறு வனப்பின் வரலாற்றினைக் காவியமாக்கினார் கச்சியப்பர்; தொடர்ந்தன பல கோயில் புராணங்கள், குன்றமர்ந்தோன் குவலயத்தார்க்கருளிய சிறப்பினைப் போற்றி, மருள் நீக்கி அருள் பொழிந்த மாமலைக் கிழவோன் மாண்தனை இசைத் தமிழில் இசைத்தளித்தார் அருணகிரியார்; எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்பாடி, நெஞ்சு நெகிழ்ந்துருகும் தமிழ் நெஞ்சங்களைத் தமிழகத்தில் தோற்றுவித்த பெருமை பெற்றார். தெள்ளு தமிழ் பாடித் திருவருள் பெற்ற வள்ளலார், திருமுருகன் புகழ்தனைக் குமரகுருபரரினும் எளிய இனிய மக்கள் மொழியில் பாடிப் பரவி வழிகாட்டிச் சென்றார். கந்தன் புகழைக்-காலத்தை வென்ற கழலோன் இன்னருள் திறத்தினைப் பாடிப் பரவி வருகின்றனர் பார்புகழ் தமிழர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தொன்பது இளவேனிலில் கந்தவனக் கலம்பகம் பாடும் வண்ணக்கவி வேங்கடராமனை எங்களுடன் தமிழ் ஈழத்துறை தமிழ் கெழு கடவுள் ஈழம்

அழைத்து, அணைத்து அருளினன். அழகன் புகழை அமிழ்தூறும் தமிழில் அல்லும் பகலும் கந்தவனத்தில் பாடிப் பரவும் பைந் தமிழ்க்குடி எங்களை விருந்தூட்டி மகிழ்ந்ததோடு, அழகன் அருள் பொழி அழகைக் காண ஆற்றுப்படுத்திற்று. தமிழ் புகழ் திருவாட்டி குமாரசாமி, அவர்கள் இளவல் யோகேந்திரன், கல்லூரி ஆசிரியை சிவா, கண்டி சிவலிங்கம் அனைவரும் அமிழ் தூறும் தமிழில் அழகன் புகழ்பாட வண்ணக்கவியை வேண்டிக் கொண்டதற்கேற்பக், கந்தவனக் கலம்பகம் தோன்றிற்று. தமிழ் ஈழத் தமிழ் நெஞ்சங்கள் எமக்களித்த விருந்தே, வினைகளை மருந்தாம் கந்தவனக் கலம்பகமாக உருப்பெற்றது. அறுமுகன் புகழைப்பாடப் பணித்த ஈரநெஞ்சினர்க்கு நானும் என் துணை மரகதமும் தனிப்பட்ட முறையில் நன்றியுடையவர் என்பதைக் குறிப்பிட விழைகிறேன்.

சங்கத் தமிழில் சான்றோர் பாடியன ஆசிரியமும் கலியும் பரியுமே கிடைத்துள கலியே கன்னித் தமிழர் வாழ்வியலைத் தெற்றென விளக்குவதாக அறிஞர் பெருமக்கள் ஆய்ந்துணர்ப்பர். அக்கலிப் பாடலின் உறுப்புகள் தனித்தனிப்பா வடிவங்களாக வளர்ந்து வந்துள்ளமை வரலாறு உணர்த்துகிறது. செய்யுள் உறுப்புகளையும், வடிவங்களையும், அகத்துறைப் புறத்திணைத் துறைகளையும், இசைப்பாடல்களையும் அளவிற்கலந்து ஆக்க இலக்கியம் கலம்பகம் கண்டனர் இடைக்காலத் தமிழர். கலம் பகம் எனும் சொல்லினை, கலம் + பகம் எனப் பகுத்துக் 'கலம்' யாழினையும், 'பகம்' அழகினையும் குறிப்பதாகக் கொள்ளின் பிழை ஏற்பட்டுவிடாது. பாடப்படும், பரவப்படும், புகழப்படும் பொற்புடைத் தலைவன் சிறப்பினை யாழ் எனும் கலம்—தமிழ் கொண்டு, பகம் எனும் கவின்—கலைத்திறனுடன் புனைவது கலம் பகம் எனினும் பொருந்தும். வடிவம் துணையே தவிர-முடிந்த முடிபாக்கிடின் சுவை தட்டுப்படும்—வடிவத்தில வளர்ச்சியைக் காணவேண்டும்—மாற்றங்கள்—புதுமைகள்—புலனறிவார் செயற் பாடுகள்—எண்ணத்தை இசைக்கும் கைத்திறன்—படைப்பில ஒளிரவேண்டும். அவ்வகையிலேயே வண்ணககவியின் கலம்பகம் அறுபத்து நான்கு உறுப்புகளும் துறைகளும பெற்று, பிறகலம் பகங்களில் காண்பதற்கரிய ஓசை வேறுபாடுகளை நிரம்பப்பெற்று அமைகிறது. யாழ் வல்லான் ஒருவன் தேர்ந்த இசையினைத் தன் திறனுக்கேற்ப எடுத்தும் படுத்தும் இசைத்துக் கேட்போரைப் பிணித்து, இன்ப உலகிற்கு அழைத்துச் சென்று, அழகுணர்ச்சி யால் நெஞ்சங்களை நீராட்டுவன். அதுபோன்றே கலம்பகம்

பாடும் கவிஞன் தன் தமிழ் பாடும் திறத்தான் படிப்போனை இன்புறுத்தி, அவன் நெஞ்சினை இயக்குவதற்கேற்ப இலக்கிய வடிவம் அமைப்பன். அவ்வழி தமிழ் வாழ்த்துடன் நூற்றோர் பாடல்களை கொண்டிலங்குகிறது இவ்விலக்கியம்

இவ்விலக்கியம், தமிழ் ஓசைச் சிறப்பினை இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்கட்கு உணர்த்துவதற்காகவே இயற்றப்பட்ட சிறப்புடன் விளங்குகிறது. காட்டாகக் கந்தவனத்தையும் கந்தனையும் பாடி மகிழும் பைந்தமிழ்ப் பெண்கள் உள்ளம் துள்ள, உவகையூற்றெடுக்க உவந்தாடும் ஊசற பாடல் இசை, ஊசலை ஊக்குவோர், ஊக்கப்படுவோர், ஊசல் அனைவு அனைத்திற்கும் ஏற்றாற்போல் அமைந்து இசையமிழ்தூட்டுகிற சிறப்பு கவிஞர் வண்ணத்திறனை விளக்குகிறது.

புரிகுழலும் திருகுறவே பொன்னூரம் ஆட்ப்
புனமயிலும் தோற்றிடவே ஆடாமோ ஊசல்
அரிபடர்ந்த விழிமடவீர் ஆடாமோ ஊசல்
அணி முருகன் திறம்பாடி ஆடாமோ ஊசல்
எரிவிழியில் தோன்றியவன், எண்ணாத எண்ணம்
ஏழைமனத் தேற்றுபவன் இளையனழை குள்ளான்
கரியன்மரு கன்பாடி ஆடாமோ ஊசல்
கந்தவன மும்பாடி ஆடாமோ ஊசல்.

தமிழ்மொழியின் சிறப்பொலி 'ழ' கரமும் 'ற' கரமும் தொட்ட இடமெல்லாம் தட்டுப்பட்டு இவ்வோசை இப்பாடலில் மட்டுமன்று கலம்பக முழுதும் விரவி வந்து நெஞ்சில் பைந்தமிழ் மிழற்றும் பாங்கு பாராட்டற்குரியது. முதற் காப்பிய வேந்தன் சிலம்பில் ஒலிக்கும் ஊசல் வரி ஒலிப்பினையே வண்ணக்கவியின் பாடல் நினைவூட்டி இசைக்கின்றது.

வடங்கொண் மணியூசன் மேலிரீஇ யையை
உடங் கைநிமிர்ந்தாய் கொற்றைமே லூக்கக்
கடம்., முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
கொடுவிற் பொறப்பாடி யாடாமோ வூசல்.

(வாழ்த்துக்காதை: 23)

என்றும்இளையனாய் நின்றருள் பொழிகின்ற இறைவனைப் பிள்ளை வடிவில், பேரின்பம் பெறுவதற்கு வழிகாட்டும் பெரி

யோன் என்றுணர்ந்து, பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபரர் பாடிய ஊசல் பாடலையும் நினைவூட்டுவது கந்தவனக் கலம்பகக் கவிஞனின் பழந்தமிழ்த்திளைப்பினை இனங்காட்டி நிற்கும்.

வித்துப் பொருமிறை கத்துங் கடலொடு
மெத்தப் பலவுல கத்தைச் சமைதர
மெச்சச் செயல்புரி விகியோனே!

எனும் 'புகழ்ந்தனர் பரவல்' பாடல் இசையரசுகள் புகழ் ஏற்ற மிகு நற்றமிழோசைச் சிறப்புடன் விளங்கும் 'திருப்புகழ்' எனில் மிகையாகுமோ!

ஆடுமகள் ஒருத்தி 'நடமகள்' துறைப்பாடலில் ஆடும் நடம் அகத்தினைச் சுவடு காட்டுவதோடு முத்தமிழ் முழங்கும் சிறப்புடன் விளங்குகிறது.

ஆடுமகள் அடியினைக் காட்டி, அடியில் அலைந்து அலைந்து ஒலிசெய் சிலம்புகள் அருமருந்தனைய பண்மொழி செய, துடியிடை நடமகள் விழிபட்டுத் துடிதுடித்து, உளம் அழிபட்டு அழிபட்டு, நடுமயில் முன்னம் நாணி நிற்கும் களிறனையான் நகைபடுநிலையில் மருள் உக, அருளுக என வேட்கும் பாடல் அது நடமகள் இசைக்கும் பாடலுள் இயலும் இசையும் இனிமைபெற, அவள் அசைவில் அழகு கூத்துள் பட முத்தமிழ் முழங்குகின்றதிப்பாடல்.

அடியினில் சதங்கைகள் ஒலிசெய ஒலிசெய
அருமருந் தனையபண் மொழிசெய மொழிசெய
துடியிடை நடமகள் விழிபட விழிபடத்
துடிதுடித் தெமதுளம் அழிபடும் அழிபடும்
நடிமயில் முனமொரு களிறது குலைவுறும்
நலமறு பதுநிலை நகைபடும் நகைபடும்
வடியயில் முருகநின் வனமுறு மகளிற்றம்
வளர்நடம் மயல்செயு மருளுக அருளுக! (19)

இருபதாம் நூற்றாண்டில் இடைநயமிக்க சிந்துபாடி, சிந்துக்கோர் பாரதி என்னும் புகழ்பெற்ற பாரதியின் சிந்துப் பாடல்கள் புரட்சிக்கவி பாரதிதாசன் கைத்திறனுன் கவிதைக்கு ஏற்ற கவின்மிகு வடிவம் சிந்தே என்று சிறப்பிடம் தருவாராயினர் தமிழ்ப்பாவலர். இங்கு கலம்பகங்களிற் காண்பதற்கரிய இவ்வடிவம் திருப்புகழ் போன்றே ஊடுருவி நின்று இசையூட்டப் பெற்றிருக்கின்றமை ஓர் சிறப்பாகும்.

திண்மை கொண்ட உளத்தோடும் — உடல்
தேங்கி நின்ற அழகோடும்
கண்மை கொண்ட நிறைவோடும் — குகன்
கந்த வனத்தில் நின்றேனே. (47)

தேடிப் பிடித்தவோர் செல்வமடி — சிவன்
சேர்ந்து படிக்குமோர் பள்ளியடி!
நாடிப் புகழ்ந்திடும் தெய்வமடி! — அவன்
நான்மறை மாற்றிய நல்லனடி! (70)

சிவன் சேர்ந்து படிக்குமோர் பள்ளியடி!' என்னும் தொடர் கவிஞர் சொல்லாற்றலை — கருத்துணர்த்தும் சிறப்பினை உணர்த்துவதாகும். சிவனைப் பள்ளியில் சேர்த்துப் பாடம் பயிலவைக்கும் திறம் பாராட்டாதிருக்கமுடியாது! படித்தார் என்றுதானே புலவர் கூறுவர். வண்ணக் கவியோ 'கல்வி கரையில' — அறிதோறும் அறியாமைப் பண்புடையது என்பது தேர்ந்து சிவனை அழகன் பள்ளியில் என்றும் பயிலும் இனிய மாணவனுக்கி மாண்படைகின்றார்.

'முன்னிலைப் பரவல்' பாடலில் கந்தவன முருகன் கழல் முதல் கவிஞர் சென்னி வரைப் பாடிப் பரவும் வண்ணணைப் பகுதி திருமுருகாற்றுப் படையினையும் பரிபாடலினையும் ஆளைந்து தரும் அமிழ்தெனலாம்.

ஊக்கமும் உரனும் தூக்கிடு கொடிமயில்
மீவிரு முகமும் அறுபெருஞ் சமயம்
ஆகக் கொண்டிடும் அரும்பெறற் புகழோய்!
... ... ... ...
மயில்மிசை வந்து மகிழ்வுடன்
அயிலுடை முருக அருளுக சிறந்தே. (98)

எனும் அடிகள் நல்லழிசியார் பாடிய பரிபாடல் வரிகளை நினைவூட்டுவன.

பிணிமுகம் ஊர்ந்த வெய்யோர் இறைவ!
பணிஒரீஇ நின்புகழ் ஏத்தி
அணிநெடுங் குன்றம் பாடுதும் தொழுதும்
அவை, யாமும் எம்சுற்றமும் பரவுதும்
ஏமவைகல் பெறுக யாம் எனவே.

(பரிபாடல்: 17)

கவிஞரின் கருத்தூற்று பெரும்பானும் சங்கத்தமிழினின்றே வெளிப்படுகிறது அகத்திணை :அமிழ்தில் திளைத்து மகிழ்பவர் நண்பர். அகத்திணையினையும் புறத்திணையினையும் கம்பன் கவித் திறனுடன், அருணகிரியார் திருப்புகழ் இசை பெய்து, புரட்சிக் கவி பாரதிதாசன் தனித்தமிழ் போற்றி இலக்கியம் யாத்திருப் பது கற்போர்க்கு நவில்தோறும் நவில்தோறும் நனிசுவை தருவது.

முதிர்தமிழ் (1) தெரிதமிழ் (1) செந்தமிழ் (24) ஆய் தரும் தமிழ் (13) நண்ணவருந்தமிழ் (39) தருதமிழ் (42) தெள்ளு திருத்தமிழ் (54) தண்டமிழ் (54) அழகிய தமிழ் (63) மேலைத் திருத்தமிழ் (70) அறிதமிழ் (98) நற்றமிழ் (99) என் றெல்லாம் தமிழுக்கு அடைதந்து அழகன் முருகன் கந்தவனத் தமர் புகழ்பாடுவது அவர் தமிழ் போற்றும் நெறியினைக் காட்டி நிற்கின்றது.

இலக்கியத் தலைவன் முருகன் தமிழ்க்கடவுள் என்பதனை நினைவூட்ட, தமிழ் முருகன் (1, 78) தமிழ் கற்றவர் (74) என விளிப்பதோடு அவனுறை கந்தவனத்தினைத் தமிழீழம் (1) என் பர் கவிஞர்.

முருகன், தனித்து, நேசற்று, மணந்து, சிரித்து, மகிழ்ந்து, பொழில் திளைத்து, அழகு நாடி ஆடி, பகை தணிந்து, அருள் சுரந்து, குன்றுதோறும் நின்று அன்பர் உள்ளமெல்லாம் உவகை ஊற்றாக அருள்சுரந்து, களைப்புற்ற சந்தன் துணையுடன் அலை கடல் நீந்தி அழகுமிழ் கந்தவனம் அமர்ந்தான் என ஏது காட்டி இறையுறை ஊர் பாடிப் பரவுவது பாவலர் திறன் பறை சாற் றும்.

> உயர்பரங் குன்றும் பழனியும் ஒண்திரு வேரகமும்
> மயல்தீர் பழமுதிர் சோலை மலைதோறும் வாழ் முருகா
> அயரலை வாயும் அலுத்த தனுலோ மகளிரொடும்
> புயலலை நீந்திநற் கந்தவனம்நீ புகுந்ததுவே. (3)

அமைப்பால், அழகியலூட்டும் திறத்தால், அருளுணர் வூட்டும் பெற்றியால், தனித்தமிழ் போற்றும் மாண்பால், இய லிசை நாடகத் தமிழ் அளைந்து அளிக்கும் சிறப்பால், பல்வேறு புதுத்துறைகளையும், பாவடிவங்களையும் ஆங்காங்கே அமைத்துக் களைப்புத் தோன்றாவண்ணம் கவித்தேன் மாந்தச் செய்யும் புனைதிறத்தால், தமிழ் அழகு வடிவாம் முருகனைக் — கந்தவனத்

தாளைப் பாடும் பண்பால், சங்கத் தமிழூட்டும் தாய்மைக் கனிவால், சிலம்பு ஒலிக்கும் புலமையால் ஒப்பற்று ஒளிரும் நற்றமிழ் இலக்கியத்தைப் படித்து உணர்ந்ததை உரைக்க என்னையும் பணித்த நண்பர் வண்ணக்கவி வேங்கடராமன் அவர்கட்கு என் நன்றி.

அறிமுகமில்லா எங்களை—ஆறுமுகம், மரகதம், சுப்பிரமணியம், சாரதா, பரந்தாமன் கிரிஜா, பென்சமின், மணிவாசகம், வேம்பையன். வண்ணக்கவி வேங்கடராமன் ஆகிய பதின்மரை வரவேற்று, விருந்தூட்டி, தமிழ் மாண்பூட்டி. எங்களில் ஒருவரைத் தமிழ்க்கடவுள் அருள்திறம் பாடப் பணித்த திருவாட்டி குமாரசாமி குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் எம் சார்பாகவும் எம் குடும்ப சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க தமிழ்! பாடுக முருகவேள் புகழ்

வேப்பம்பட்டு, ப. ஆறுமுகம்
தமிழ்நாடு. 14-5-81

உ

# கந்தவனக் கலம்பகம்

## தமிழ் வாழ்த்து

உலகிற் கொருசுடராய் உள்ளினிக்கும் தேனாய்
நிலைபெற் றிறையவன்போல் நிற்பாய் – பொலந்தமிழே!
சங்கத் துணைவளர்த்த சான்றோன் தமிழ்முருகை
இங்கென்றன் நாவிருந்து போற்று.

### 1. நூல்

முன்னிலைப் பரவல்

(வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா)

— தரவு —

மருவுமலைக் குறமகள்தான் மகிழ்ந்திடத்தே னிலவுநுகர்
திருவிலங்கை வடகரையின் சிவந்தகலங் கரைவிளக்கே!
மலிதருநற் புகழ்மணக்க மதக்களிறு புறமிருக்கப்
பொலிகண்டி முருகவனம் பொலிகின்ற புதுமலரே!
அமிழ்தமொழிக் கயற்கண்ணி அணிமதுரை இளவர
[சாய்த்
தமிழீழம் தனிப்பரவத் தழைத்திடுசெஞ் சுடர்வேலே!

— தாழிசை —

கந்த வனத்துள் களிக்குந் தமிழ்முருகா!
முந்தைத் தமிழ்நாடு மூழ்கடித்த அக்கடலோ
எந்தைநீ சீற்றம் எடுத்திடுவாய் எனறஞ்சி
முந்திக் கையசைத்துன் முன்றில் மிகவாடும்

முருக வனத்துள் முளைத்திட்ட வேல்முருகா!
இருங்கடல் ஈழம்நீ எய்திடலால் அக்கடலோ
ஒருவேலை ஓச்சி உவர்வேலை நீர்வடித்தல்
கருதி மனந்தளர்ந்துன் காலிணையே தான்தேடும்.

பொலிகண்டிச் சோலைப் புலியே! திருமுருகா!
நலம்வாழ்த்து மோசை நடுக்கநடுங் கச்சுடலோ
அலைக்கையால் வெண்கவரி வீசி மெலியாமல்
கலக்கறவே நின்புகழைக் காதினிக்க வேபாடும்.

— அராகம் —

முதிர்தமிழ் இளமொழி முழுதுணர் மனமொடு
முழுகிடும் மகிழ்வுறும் முருகநின் ஒருமுகம்
புதிர்தரு குறமகள் புதுநலம் மழலைகள்
புணர்மணம் அழகொடு பருகிடும் ஒருமுகம்
உதிர்கிற புனல்விழி உடையநின் அடியவர்
உவகையொ டருள்பெற உதவிடும் ஒருமுகம்
அதிர்கிற உளமற அமரரும் உயர்வுற
அருமறை உரைதரும் அழகநின் ஒருமுகம்
கதிர்விடு படையொடு கடையவர் கெடவிழி
கனலுறு சினமிகு கடியதுன் ஒருமுகம்
மதியொடு சுடர்நிலம் வழிவழி சுழல்தர
வகைசெயும் முறைசெயும் மயலறும் ஒருமுகம்.

— பேரெண் —

வள்ளிமலர் அழகுக்கு மயிலொதுங்கும் எனத்தெரிந்து
கள்ளியவள் அமர்தொடையைக் கவின்மயிலில்
[பதித்தோனே!
அடியவர்கள் மலர்க்குவியல் அணிந்தமறு திருத்தாளைக்
கொடியவர்க்கும் அருள்மூளக் கொடுத்தனையோ
[கொடையானே!

— சிற்றெண் —

பகைவரைச் சுட்டிப் பதைத்திடும் ஒருகை
நகைவரச் செவ்வேல் நடத்திடும் ஒருகை
கொடியினிற் சேவல் கூவிடும் ஒருகை
அடியவர் வாழ்த்துக் கருளிடும் ஒருகை.

— இடையெண் —

பிணிமருந் துதவிடும் ஒருகை
அணியவர்க் கலர்தரும் ஒருகை
ஆயிழை ஆணைதரும் ஒருகை
தாயெனும் தமிழொடும் ஒருகை
மயக்கது மாற்றிடும் ஒருகை
துயர்க்கணீர் துடைத்திடும் ஒருகை
குரவையிற் குழைந்திடும் ஒருகை
புரிமணம் புணர்த்துமுன் ஒருகை.

— அளவெண் —

தெரிதமிழ் அழகே!
அருளமை முருகே!
செருவினில் எரியே!
திருவினில் திருவே!

கனியதன் சுவையே!
பனியதன் குளிரே!
நினைவதன் நிழலே!
முனிவரர் முதலே!

அறமுறை விடமே!
புறம்விரி ஒளியே!
திறமதில் அணுவே!
குறமகள் துணையே!

உடலினுள் உயிரே!
மடமறு குகனே!
அடலவர் படையே!
கடவுளர் முடியே!

— தனிச்சொல் —

எனவாங்குச்

— சுரிதகம் —

சங்கினம் ஒலிக்கத் தெங்கினம் சிரிக்கும்
பைங்கிளி யொடுகுயில் பண்ணிசை பாடும்
கந்தவ னங்களி தந்திடும் முருகா!
இமிழ்கடல் நானிலம் தமிழொடு தழைய
நின்றிறம் பாடிப் பரவினம்
குன்றுவிட் டெம்முளம் குடிபுகுந் தோயே!

2. உறுபெயர் கேட்பாளாய்த் தலைவி அறத்தொடு நிற்றல்

(நேரிசை வெண்பா)

தோயும் குருதிச் சுடர்வே லவன்புகழே
தேயும் இடையீர் தெரிந்திசைப்பீர் — தாயின்
வளமருளும் கந்த வனத்தவனைப் பாடின்
உளமுருகும் இன்பம் உயர்ந்து.

3. ஊர்

(கட்டளைக் கலித்துறை)

உயர்பரங் குன்றும் பழனியும் ஒன்றிரு வேரகமும்
மயல்தீர் பழமுதிர் சோலை மலைதொறும் வாழ்முருகா
அயரலை வாயும் அலுத்தத னாலோ மகளிரொடும்
புயலலை நீந்திநற் கந்த வனம்நீ புகுந்ததுவே.

## 4. பாண்

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

வேலன் வரும்வரும் எனச்சொலிப் பாண
 வீணில் உரைபல மிழற்றினை நீதான்
காலன் எனதுயிர் கருதினன் இனிநான்
 காத்திங் குறைவது கசந்தனன் போதும்
நீலக் கடலலை நெருப்புமிழ் நஞ்சோ?
 நீலி குறமகள் நெடிதுண ராமல்
சோல மயிலனைக் கந்த வனத்துக்
 கோனை எமதிடம் கொணர்ந்திடு வாயே.

## 5. தோழி வாயில் மறுத்தல்

(அறுசீர் விருத்தம்)

வாயணி பவளம் காட்டிட
 மணியிதழ் தமிழை நாட்டிடத்
தீயணி மலையின் காட்டிடைச்
 சிறுகுற மகள்கை பூட்டினை
காயணி கந்த வனத்திலே
 கவின்முரு காதண் புனத்திலே
மேயினை என்ன மனத்திலே
 மெலிகுவள் தேவி சினத்திலே.

## 6. பழிச்சினர் பணிதல்

(அறுசீர் முடுகியல் விருத்தம்)

சினவுரு வொடுபல சிறுமைகள் புரிதரு திறலுறு
 [தாருகனைத்
தினவொடு படமலை சிதறிடு படையொளிர்
 [சிவனருள் சேயவனே!
கனவெது நனவெது கழறிய நகைமொழி
 [கருதலன் கந்தவனம்

மனமுற முருகநின் மலரடி தொழுதனன்
மகிழ்வுற அருள்புரியே.

## 7. திருவூசல்

(எண்சீர் விருத்தம்)

புரிகுழலும் திருகுறவே பொன்னாரம் ஆடப்
புனமயிலும் தோற்றிடவே ஆடாமோ ஊசல்
அரிபடர்ந்த விழிமடவீர் ஆடாமோ ஊசல்
அணிமுருகன் திறம்பாடி ஆடாமோ ஊசல்
எரிவிழியில் தோன்றியவன், எண்ணாத எண்ணம்
ஏழைமனத் தேற்றுபவன் இளையனழ குள்ளான்
கரியன்மரு கன்பாடி ஆடாமோ ஊசல்
கந்தவன மும்பாடி ஆடாமோ ஊசல்.

## 8. பழிச்சினர் பணிதல்

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

ஊசு கின்றமன மாசு கொண்டசெயல்
ஏசு கின்றமொழி கொண்டனெம்
கூசு கின்றமுடை வீசு கின்றவுடல்
பூசு கின்றபொடி மங்கையர்
தூசு கண்டுமிக மூசு கின்றவுளம்
சீழ்சு ழன்றமட ஈயெனப்
பேசு கந்தவன மேசு டர்ந்தெமது
காசு கொன்றருள்க வேலனே.

## 9. மறம்

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

வேலியின் நாப்பண் விளங்கிடு பயிரென
வேலவன் நற்றருள் விழைவுடன் உறைகுவம்

கூவிநீ என்ன குழறினை கழறினை
  கொடியவன் கோழை குறுகிய மதியினன்
தாலியே கட்டத் தருதிர்நும் மகளெனத்
  தகுதிக ளின்றிச் சலசல மொழிகுவை
காலினில் வீழ்ந்து கதறினும் விடுகிலம்
  கந்தவ னப்பேர் கழறலின் உளதுயிர்.

## 10. மடக்கு — புகழ்ந்தனர் பரவல்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உயிர்பீடுற ஏந்துவர் காவடியே
  உருகத்தொழு தோம்முரு காவடியே
கையிலேகுற வேளெழினை மாவழித்தாய்
  கடலிற்பொர வந்தசூர் மாவழித்தாய்
மயிலேறிடு நீயுமு கந்தவனம்
  மடல்நாரைமேல் மின்குதி கந்தவனம்
குயிலார்கண வாகைகு வித்திடுவோம்
  குமராதொழ வாகைகு வித்திடுவோம்.

## 11. புகழ்ந்தனர் பரவல்

(பதினொரு சீர்த் திருப்புகழ் ஆசிரிய விருத்தம்)

வித்துப் பொருமிறை கத்துங் கடலொடு
  மெத்தப் பலவுல கத்தைச் சமைதர
  மெச்சச் செயல்புரி விதியோனே!
தத்தித் திரிகிற கொச்சைக் குரலுடை
  தத்தைக் கினிமைகற் பித்துக் குலவிடு
  தத்தைக் குறமகள் தலைவோனே!
குத்திக் குருதிரு வித்துச் சுடர்விடு
  கொத்துக் குலமலர் நத்தித் துயல்வரக்
  கொற்றக் கரின்மிகு கொலைவேலா!

மத்துத் தயிரதை ஒத்துத் திரிமனம்
மச்சத் தொடுகுறை கொத்தித் திருவருள்
வைத்துப் பொலிகுக வனத்தானே!

## 12. அம்மானை

(ஒரு பொருள் மேல் மூன்றடுக்கிய வெண்செந்துறைகள்).

தானேயாய் எவ்வுயிர்க்கும் தாயாகும் நம்குமரன்
கானேகி மூத்த கிழமாளுன் காணேடி!
கிழமாளுன் அண்ணன்முன் கேழ்வேங்கை யாய்நின்று
அழுவானு மானதுதான் அம்மானுக் கம்மாளுய்!
குறமானைக் கந்தவனம் கூடிமகிழ் கொள்ளும்
அறமாளு னைப்பாடி ஆடுதுங்காண் அம்மாளுய்!

## 13. வரைவு கடாதல்

(பதினுன்குசீர் ஆசிரிய விருத்தம்)

ஆய்தரும் தமிழின் அழகெலாம் அடைய
அமைந்திடும் அழகனே மகளிர்
அழகெலாம் அழிய அணிமயில் உலவி
அருள்புரி முருகனே இவளோ
காய்கிற உடலும் கவலையும் உடையள்
கனவிலும் கருதுவாள் உனையே
கனிமொழி இருவர் கலவியுள் உழல்வை
கருவிழி அரிவையர் பிறரை
நோய்தரல் அறமோ நுதல்விழி இறைவன்
நுமைமிக அறிஞனென் றடைவான்
நூலெனும் இடையள் நுமதிடம் குறையே
நுவலுவள் நுவலுக முறையோ
வாய்மையர் முழும மழைமுகில் மருவ
மணியணி தருகடல் முழங்க
வடகரை இலங்கை வளமிகு கந்த
வனத்தவ வணங்கினின் றேமே.

### 14. வாயுறை வாழ்த்து

(சிந்து)

நின்றபல தென்னைகளின் நெற்றின முதிர்ந்துவிழ
நீள்கயல்கள் தாம்புதையு மே – அருள்
துன்றுதிருக் கந்தவனம் தோன்றுமுரு கன்புகழைச்
சொல்லலுறத் தீமையறு மே.

காற்றினிலே ஆடுமரம் காய்கனிபூத் தாம்படைக்கக்
காட்சியருள் கந்தவன மே – நறும்
ஊற்றினிலே நோயழிக்கும் உள்வீதிச் சிறப்புடைய
ஓரழக னைத்தொழுவ மே.

சாருகிற புள்ளினங்கள் தக்கபழங் கள்மகிழ்ந்து
தாம்மயங்கு கந்தவன மே – கொடுந்
தாருகனைக் குன்றமொடு தாக்கியருள் செய்தவனின்
தாள்பணிய நன்மைவரு மே.

### 15: கனவொடு மயங்கல்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வருமுகில் வழியே பற்றி வளர்நிழல் செல்லு மாப்போல்
முருகநின் அருட்கண் நோக்கில் முகிழ்த்திடும் [நன்மை எல்லாம்
மருவிய மலர்சூழ் கந்த வனத்தவா வம்பு செய்யாய்
கருதிய கனவில் நின்றாய் காட்சியும் தருதி [இன்றே.

### 16. களி

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

இன்றுளன் என்றறி யாதுனை உன்னி
இன்று கரிசுகள் ஏப்பமும் விட்டோம்

துன்றிய உள்வெறி தூண்டு வதாலே
சோர்கிலம் துள்ளி நடுங்குவம் ஆடிக்
கன்றிய துன்பமும் இன்பமும் காணும்
கரும்பனை மங்கைகள் மாந்திய கந்தா!
துன்றிய கந்தவ னக்களி கொண்டோம்
தூரசென யாரையும் தோற்கடிப் போமே.

## 17. வாயுறை வாழ்த்து

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

போமிளமை செல்வமெனப் புலம்புற்று மடியாமல்
[புவியின் மீது
தோமறுநேர்க் காந்தமதை எதிர்க்காந்தம்
[இழுத்தலென இழுத்து நம்மை
ஏமமுறச் செய்திடவே இருக்கின்றான் கந்தவனத்
[திறைவன் நல்லீர்!
காமமுறக் கடம்பனடி கைதொழுவோம்
[அவன்தானே காத்து நிற்பான்.

## 18. பந்து

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

பான்மு கங்க ளாறு கொண்ட பச்சி ளங்கு ழந்தையாய்
நான்மு கன்ம திக்கி லாமை நன்கு ணர்ந்து ணர்த்திஞய்
தேன்ம யங்கு கந்த நல்வ னத்து நின்ற செல்வநின்
வான்ப ரந்த சீர்கள் பாடி வந்து பந்த டிப்பமே.

## 19. நடமகள்

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

அடியினில் சதங்கைகள் ஒலிசெய ஒலிசெய
அருமருந் தனையபண் மொழிசெய மொழிசெயத்

துடியிடை நடமகள் விழிபட விழிபடத்
துடிதுடித் தெமதுளம் அழிபடும் அழிபடும்
நடிமயில் முனமொரு களிறது குலேவுறும்
நலமறு புதுநிலே நகைபடும் நகைபடும்
வடியயில் முருகநின் வளமுறு மகளிர்தம்
வளர்நடம் மயல்செயு மருளுக அருளுக.

20. குயில்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கன்னங் கரிய குயிலே கன்னி யழகு மயில்நான்
முன்னம் முருகன் வரவால் மூளும் கனவில் அழிவேன்
தின்னும் நினைவு மிகையான் தீயின் மலராய் எரிவேன்
மன்னும் கந்த வனத்தான் மகிழ்ந்து வரநீ கூவாய்.

21. கிளி

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வாயே திறவாய் வண்ணக் கிளியே மழலேக் குறத்திக்கு
நீயோ உடைவாய் நிறுத்து மொழியை நீல மயிலோனும்
சேயோன் உன்னேச் செவியில் கொள்ளான் கந்த
[வனத்தானே
தாயாய் உன்னேக் காப்பன் குறத்தி தாள்கள்
[பணிந்தாலே.

22. ஊர்த்தொன்மை

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தாலே லேலோ தாலென்று
தண்ணீர்ப் பொய்கைத் தாமரைமேல்
வேலே கொண்டு முருகாநீ
வெள்ளே கொண்ட மனத்தோடு

கோல விழிகள் தாமுடக்
கொஞ்சி அறுவர் தாலாட்டச்
சால அயர்ந்து விழித்தவுடன்
சார்ந்தா யோநீ கந்தவனம்.

## 23. காலம்

(பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்)

நீகந்த வனத்து நிலையாகி நின்றாய் நிலையாத தெங்கள் காலம்
நெருக்கு நேராய்ப் போருக்கு வாரார் நெருப்பாக வஞ்சம் புரிவார்
ஆகந்த இதுவோர் கெடுங்காலம் அன்னை அழுதாலும் சிரிப்பர்
[உளரே
அணுகுண்டு கண்டே அழிகின்ற காலம் அறியாது வந்த
[அறிவால்
வேகின்ற காலம் மெலியாரை வலியர் வெறுப்போடு துன்பம
[விளைப்பர்
மிகையான பேர்கள் விளைத்தாலும் தீமை வெகுநேர்மை
[என்று மொழிவார்
தீகின்ற துள்ளம் திருவாரும் கந்த வனத்தானே வருகை புரிவாய்
தீராத காலம் திரும்பாதோ நல்ல செழிகாலம் காண உலகே.

## 24. முன்னிலைப் பரவல்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

உலகளிர் ஞாயிறு கிழக்கெழுந் தாங்கு
வடகரை இலங்கை வைகிய செவ்வேள்!
இறைவனின நெற்றி நிறைவுறப் பிறந்த
சுடரே! கங்கைச் சுழல்தவழ்ந் தோனே!
தடநீர்ப் பொய்கை இடமெனக் கொண்டு
கார்த்திகை அறுவர் கவின்முலை பருகி
மாற்பெருங் கடவுள் மனங்கனிந் துருக
நாற்பகு தேவர் நலம்நனி பெருகத்
தாமரைப் பாயல் தழுவிய முருக!
தூமன உமையாள் தாய்மிகத் தழுவ

அறுபெருஞ் சமயமும் ஒன்றெனக் காட்ட
ஆறுரு ஒருரு ஆயினை பெரும!
நான்முகன் செருக்கினை நறுக்கினை; பின்னும்
வேண்மறம் காட்டும் மிடுக்கினை போலக்
குருகுபெயர்க் குன்றம் குலைத்தனை; மற்றும்
மக்களின் வஞ்சம் சிக்கெனத் தெரிந்தோ
பூதப் படையினைத் தீதறத் தேர்ந்தாய்
செங்கதிர் செற்றோன் செருக்களத் தழியப்
பொங்கரி முகனும் பொன்னுல கடைய
அடல்மாச் சூரன் கடல்மா வாக
ஆங்கவற் பிளக்க ஆம்மயில் சேவல்
ஊர்தி கொடியெனத் தேர்தி; நின்போல்
பகையவர்க் கருளும் கடவுளர் யாரே?
பூவும் புகையும் நாவும் கொண்டு
கடம்பா கந்தா கவின்மிகு குமரா
மடவாள் வள்ளி மருவிய முருகா
அலைமகள் மருக மலைமகள் மகனே
இலைபுரை வேலோய் இறைவா தலைவா
எனமொழி பயிற்றி உனைமிக வாழ்த்தும்
அடியார் தமஇடர் பொடியாம் படிசெயத்
தேனீர் பருகிய மீன்குதி கொள்ள
ஒருகால் கொக்கு வருகால் பார்க்க,
இருகால் தொழுதும் இணையறு சீர்மை
முக்கால் முழங்கும் முனிவரர் போற்ற,
மூக்கால் உயிர்த்து நாக்கால் நவின்று
காக்கா என்று கன்னியர் கதற
அரிபடர் கணைகள் வரிபடு வண்டென்(று)
அடைந்தை புறுகால் அறுகால் ஆண்வண்(டு)
எழுகால் தென்னம் பாளைகள் சிரிக்கச்
செந்தமிழ் சிறக்கச் செழுமறை வழுத்தக்
கந்த வனப்பொழில் காட்சிநீ தருக!
ஈரிளம் பெண்டிர் சேர்வுற மயில்மேல்
கூரிய வேல்கொடு குளிர்ந்தருள் கொண்டேன்.

### 25. நற்றாய் வேலனை வேண்டல்
(கலி விருத்தம்)

என்மகள் துரும்பென இளைத்து நைந்தனள்
இன்மலர்க் கந்தநல் வனத்தின் ஏந்தலே
பன்மணி முத்தமும் பகைத்த தென்னவோ
இன்முகம் காட்டியென் இடரை நீக்குவாய்.

### 26. பழிச்சினர் பணிதல்
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நீக்கு வாய்நீ மாசினை நெருப்பு முன்னர்த் தூசெனத்
தேக்கி நின்ற காதலால் சிறந்த வள்ளி யோடுடன்
போக்குப் போன கந்தனே புலமை கொண்ட
[நெஞ்சனே
மாக்க டல்சேர் கந்தநல் வனத்து வைக
[வாழ்த்துவேன்.

### 27. பாவை(தோழி பரத்தையரை இகழ்தலும் ஆம்)
(தரவிணைக் கொச்சகக் கலிப்பா)

வாழ்த்தி வரவேற்று வண்ண மலர்ப்படுக்கை
தாழ்த்தித் தணியாத தாகம் தணிக்கவெனப்
பாழ்த்த பணம்பிடுங்கிப் பல்லார் நலம்சொலலும்
ஊழ்த்த சதைக்கொடியார் ஊளையிட் டோடுறவும்
வீழ்த்த வருங்கற்பின் மெல்லியலார் வென்றிடவும்
ஊழ்த்திறம் இற்றகல உள்ளம் ஒளிர்ந்திடவும்
சூழ்த்த மலரில் சுரும்புறங்கு கந்தவனம்
ஆழ்த்தி மனம்முருகே வாழ்த்தேலோர் எம்பாவாய்.

### 28. பழிச்சினர் பணிதல்
(கலி விருத்தம்)

பாவாய்தரு புலவர் பண்ணுறுதமிழ் பாட
ஓவாதவர் குறைகள் ஒழிப்பாயருள் முருகா!

தீவாய்வரு புழுவின் தீய்வேன்துயர் ஓய
வாவா மலர்க் கந்த வனமேதொழு கின்றேன்.

29. காமம் மிக்க கழிபடர் கிளவி
(கலி விருத்தம்)

தொழுதிமகிழ் வுறுகிளியே துறையணுகு கயலினமே
பொழுதுவிழ வருமதியே புதுவருவாய் தருபுனையே
கழுதுமருள் கலையழகே கந்தவனக் கனிமலரே
அழுதுபுலம் பிடவவரோ அடிமையெனை
[அணைகிலரோ

30 தோள் வகுப்பு
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அணைவுறு குறமகள் தழுவின அயலொரு குலமலர்
[உலவின
இணையறு முனிவரர் புகழ்வன இளையவர் மனமயல்
[நகுவன
துணையென வருபவர் அருள்பெறத் துகளுறு
[பகையவர் மருள்வன
பணைதரு பதினிரு தொகையின பயில்குக
[வனத்தவன் தோள்களே.

31. மடல்
(ஓரெதுகைக் கலிப்பா)

தோளார் குழல்சரியத் தூங்கா மனமெரிய
வாளார் விழியுகநீர் வண்ணங்கள் தாமழியத்
தாளாளன் செய்த தகவெல்லாம் கேட்டிடுவீர்!
வேளாண் விளைகதிரை வேட்டுக் கிளிகவர
நாளாள் மலர்மரையில் நல்வண்டு தேன்பருகப்
பாளை உதிரப் பயில்மீன் அதுகதுவ
வேளாம் முருகன் விழுப்புகழை நான்பாடித்

தாளே வணங்கத் தனிச்செல்வேன் கந்தவனம்
காளை ஒருவனோர் கள்ளனோ யானறியேன்
தோளே கடம்பு துலங்கச் சிறுமுறுவல்
தோளேபோல் கொட்டித் திறம்பா உளம்திருப்பிக்
கேளாத கேட்கக் கிளவா தனகிளந்து
மீளாத காதல் விலங்கு மிகப்பூட்டி
மூளாத நீயன்று மூட்டியவன் இன்றெம்மை
மாளாது மாள்வித்து மாயப்பொய் செய்தான்காண்.
காளான் முளைக்கவரு காளை மதிப்பதுவோ
தாளாரும் தாமரையுள் தாவிமீன் துள்ளுவதோ?
ஆளான அவ்வேலன் ஆங்குரைத்த சூளுரையும்
தூளாம் படியென்னைத் தொட்டணைத்த
[செய்கைகளும்
கோளாக உங்கள்முன் கொட்டிடுவன் வெட்கமிலேன்
தாளால் கணவன் தலையுதைக்கும் தையலரும்
வாளால் பலரை வதைபுரியும் கன்னியரும்
ஆளார் அடக்குமுறை ஆற்றுகிற ஆட்சியரும்
வேளாவே ளைக்கு மிகவுண்ணும் சோம்பிகளும்
ஆளங் குமரன் அடியிணைகள் பாடாமல்
நாளைக் கடத்தும் நலமில் உளத்தாரும்
பாளைச் சிரிப்பால் பணம்பறிக்கும் பேயினமும்
ஊளை நரியும் உதவா மடையோரும்
தாளை யடைத்துத் தனியுண்ணும் வன்கணரும்
கோளப் புவிமீது கொஞ்சமும் நாணும்
நீளக்கை வீச்சு நிமிர நடத்திடநான்
காளை அவனன்றிக் காணுகிலேன் நாணுவனோ
சோள இளப்பயிர்க்குச் சொக்கிடுமோர் ஆடேபோல்
போள மனம்காமம் போகும் வழியறியேன்
ஆளன் அவனை அடைய முடியாமல்
மாளல் கருதுமெனில் கோழை இவளென்பீர்
மீள மடலே விரும்பிடுவன் மெல்லியலீர்!
நாளான தொல்காப் பியங்கடந்து நற்குறள்செய்

கேளாளர் சொல்லும் கிழக்கிட்டுப்
[பெண்ணெனினும்
வேளாப் பனேக்கண் விளேந்த மடலூர்வன்
தாளார்தண் மாலே தர.

### 32. பழிச்சினர் பணிதல்
(வஞ்சித்துறை)

தரவரு குமரா
முருகநல் வனமே
வரமலம் ஒழிய
வரமருள் புரிவாய்.

### 33. கைக்கிளே (மருட்பா)

புரியவிழா மொட்டோ புனமருந்தோ மானே
கரியாமல் என்னே நீ காக்க—வரியாரும்
கண்படை யால்கொலே புரியும்
மண்புகழ் கந்த வனத்தொழு தேனே.

### 34. பழிச்சினர் பணிதல்
(வஞ்சி விருத்தம்)

தேன்வி ரும்பு திணேப்புன
மான்வி ரும்பு மலேக்குக!
நான்வ ணங்க நலந்தர
வாநீ கந்த வனத்தவா!

### 35. தவம்
(கலி விருத்தம்)

தவந்த ழைத்திடு தண்ணளி ஓங்கினேர்
கவர்ந்த வான்மழைக் கந்த வனத்தினில்
குவிந்த ழைத்திடு குஞ்சுகள் கோழிநீ
உவந்த ழைத்தனம் ஒப்புக கந்தனே!

### 36. வாயுறை வாழ்த்து
(சந்தக்கலி விருத்தம்)

களர்நிலமென விளைபயனறு கடையவரின
[மெனினும்
தளருடலுடை வறியவரொடு தசையழுகின
[ரெனினும்
வளர்கொடுவினை துயர்பலதர மனமெரிபவ
[ரெனினும்
கிளர்குகவனம் வழிபடினவர் கிளர்வொடுதிரு
[மிகுவார்.

### 37. தோழி வினுதல்
(கலித்துறை)

மின்னே தேனே மெல்லிடை யேநீ விளையாடி
இன்னே வாவென் றேவினன் அன்னை கந்தவனம்
கொன்னே உன்றன் கூற்றினைக் கொண்ட
[கொடியோன்யார்
அன்னை கேட்கின் யாங்ஙனம் சொல்வேன்
[ஆருயிரே.

### 38. மழிச்சினர் பணிதல்
(கலி விருத்தம்)

ஆருயிர்க்கு நல்ல அருமருந்தே வானில்
காருயிர்த்த கந்த வனமுருகா கள்ளச்
சூரழித்த சூரா துயர்முழுதும் போகப்
பாருயர்த்த தாள்கள் பணியவருள் தாராய்.

### 39. கும்மி
(ஒரு பொருள்மேல் ஆறடுக்கிய வெண்செந்துறைகள்)

தாரும் கடம்பது தந்து மகிழ்பவன்
தாமரை நல்லடி போற்றியருள்

காரும் கவின்செயும் கந்த வனத்துறை
கந்தனை வாழ்த்திநீ கும்மியடி
கம்மிக் குரற்கிழம் காட்டிக் குறத்தியைக்
கட்டிப் பிடித்தவக் கள்வனின்முன்
கும்மிய டிப்பெண்ணே கும்மியடிக் கைகள்
கூப்பிக் குவிந்துநீ கும்மியடி
வட்ட மலைப்பழ னிக்குள் ஒளிந்துயிர்
வாட்ட முறச்சிவன் அம்மையழக்
குட்டம் வளர்ந்துயர் கொற்றம் படைத்தவக்
கோமகன் மெச்சிடக் கும்மியடி
ஆடும யிற்குலம் ஓடுற வேகுயில்
அஞ்ச மொழிந்திடு பெண்கிளியே
நாடு மலர்க்குழல் நல்லவ ளேகுகன்
நண்ண வருந்தமிழ்க் கும்மியடி
பஞ்சைய ராயினும் பண்பொடு கைதொழின்
பல்வரம் தந்தருள் சேய்முருகைக்
கொஞ்சிக் கிளிப்புறம் கொள்ளக் களிப்புடன்
குந்திநீ கோலக் கும்மியடி
வெள்ளை மனத்திரு வேங்கட ராமனென்
வேட்ட மணத்தமிழ் பாடிமனம்
கொள்ளை யடித்த குறத்தி மணாளனின்
கொற்றம் குறித்துநீ கும்மியடி.

40. காமம் மிக்க கழிபடர் கிளவி—தூதுமுனிவின்மை
(கலி விருத்தம்)

அடியார் குழுவே அலையே கடலே
கடியார் பொழிலே கலையே கனியே
கொடியார் முருக வனமே கொலைசால்
வடிவே லவரோ வரநீர் அருள்வீர்.

## 41. நற்ருய் கண்டோரை வினவல்
(கலித்துறை)

அருளாளுயர் கந்தவ னத்தவன் அன்பு பூண்டு
வருவீர்வழி யிற்கவின் வம்புகொள் மங்கை
[யோடும்
இருள்வாய்மறைந் துற்ற இளைஞனைக் கண்டிர்
[கொல்லோ
மருளாலயர் வன்மகள் வைத்தவத் தாரை பற்றி.

## 42. வஞ்சப் புகழ்ச்சி
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

பற்ருர் புரமெரி செற்ரு னருள்மகன்
பட்டா ருடையவிர் கோவணமாய்
அற்ருர் நிலையது பெற்ரு னிருமனே
யுற்ருல் வருவது கற்ருனே
செற்ருர் அழிபட மற்ருேர் வழிபட
நற்றேர் பழனியில் நிற்காமல்
கற்ருய் தருதமிழ் சொற்ருன் மகளிரொ(டு)
உற்ருன் முருக வனந்தானே.

## 43. தூது முனிவின்மை
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தானமர் கந்தவ னத்துத் தாழையை மருவிய
[குருகே!
வானவர் வணங்கிட வந்து மகிழ்வுறு சோலையின்
[மருங்கே
தேனென மானெனச் சொல்லித் திருடியென்
மனநலம் கவர்ந்த
கோனிடம் என்னுளம் கூறிக் கூட்டிடின் குறித்தன
[தருவேன்

**44. பழிச்சினர் பணிதல்**
**(பதின்மூன்று சீர் ஆசிரியத் திருப்புகழ் விருத்தம்)**

தரத்த ரத்தரத் தழுவிடு விலைமகள்
தனித்த னித்தனி புகழ்ந்திடு கொடியவர்
தவித்த லைப்புறத் தமரினம் எருமையின்
மதியாமல்
மரத்த பொய்ப்படு மடையவர் பெருகினர்
வகுத்த றப்படி வழுவிய கரவினர்
வணக்கி இப்புவி மகிழ்வுற அருள்புரி
முருகோனே
அரத்த லைப்பறும் அயிலொடும் வளர்கொடி
அடுத்த டுத்தநும் புகழ்பல புகன்றிட
மடத்த னிக்குயில் மடந்தையர் புடைவர
மயில்மீதில்
வரத்த ழைத்திடு முருகநல் வனமதில்
வளைத்த நெற்குலை வளக்கொடை யுதவிட
மறித்து முத்தலை மடந்தையர் நிறைமிக
வருவாயே!

45. வெறியாடுவார் வேலனை வணங்க வேண்டல்
(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

வாய்ம றந்து மூச்சி றந்து வம்பு செய்த பேய்க
[ளஞ்ச
ஒய்வு றங்க லேது றந்திங் கோம்பி நின்ற சேயு வக்க
ஆய்வ ரங்க ளேயி ரந்தும் ஆடி யின்று பாட்ட
[ணிந்தும்
காவில் கந்த நல்வ னத்தில் கன்னிப் பெண்ணை
நீவ ணங்கும்.

46. இரவுக்குறி மறுத்தல்
(பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்)

கும்மி ருட்டுக் கூந்த லுள்ளார் கூடி ருட்டு வேளை
[தன் னில்
கொட்ட மென்ன கொள்வ தென்னவோ
எம்ம ருட்டு கின்ற வேலை ஏந்தி நின்ற கந்த நல்வ
னத்து வந்த எண்ணம் என்னவோ
பொம்ம ருற்ற பொன்னுக் கின்று போட்ட காவல்
[பொன்ற லில்லை
பொற்பி ழத்தல் நன்று மல்லவே
மம்ம ருற்ற மங்கை தன்னை வம்பு செய்த வள்ளல்
[நன்று
வந்த வாறு போதல் இன்னமே.

47. குழவிக்கண் தோன்றிய காமப்பகுதி
(சிந்து)

இன்மை கொண்ட உளத்தோடும்-உடல்
தேங்கி நின்ற அழகோடும்
கண்மை கொண்ட நிறைவோடும்-குகன்
கந்த வனத்தில் நின்றேனே.
நின்று வணங்கி முருகோனை-மனம்
நேர்ந்து நினைந்து மெலிவேனைக்
கன்று கருது தாய்போல - அவன்
கருத்துட் கொண்டு களித்தானே
குன்ற மாடுங் குமரோனே - வளக்
குறிஞ்சி பாடுந் தலைவோனே
வென்ற சூரை அருள்வோனே – உயிர்
விழைய வரங்கள் தருவோனே
என்று பரவி மகிழ்வேன்முன் — அவன்
இளைய குழந்தை உருவாகி

இன்று சேலை பிடித்தானே - எனை
இகழ்ந்து திருடி என்றானே
வம்புப் பேச்சுப் பேசாதே - உனை
வணங்கு வோரை ஏசாதே
நம்பும் என்னை ஏனவோத — அவன்
நகைத்த துள்ளம் போகாதே
என்றன் கைவேல் இரண்டாக - முகம்
இருக்கும் போதும் இலையென்றாய்
நன்றே இதுவும் எனக்கேட்டான் — உளம்
நாணி ஒடுங்கிட்டு நடந்திட்டேன்.

48. பின்னைக்குறும்பு
(கலி விருத்தம்)

விட்டுச் சுடர்மீனை வேட்டுக் கனியெனவே
தொட்டிற் சிறுமுருகன் தூக்கும் சிவன்
[பிறையாம்
மொட்டைக் கொடுவாளால் மோதல்
[உமைத்தடுக்கக்
கட்டிப் பிடித்தானைக் கந்த வனம்பாரீர்.

49. சித்து
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

பார்த்திடுமப் பாவமரும் பாம்புதலை ஏற்றிடுவன்
பழந்தெய்வ யானைக் கொடியில்
சேர்த்துமிகக் கட்டியருள் சிவமுருகைத்
[தூக்கிவிடு
செயல்புரிவன் ஐய குறவர்
காத்தவள்ளித் தாய்பற்றிக் கடுஞ்சிறையுள்
[அடைத்திடுவன்
கந்தவனச் சித்தன் எனையே

பார்த்தவரும் மெச்சிடவே பற்பலவண்
[டங்களையும்
பாரகத்தில் சுற்றி வருவேன்.

### 50. பழிச்சினர் பணிதல்

(சிந்து)

வந்துப ணிந்தவ கத்தியர்க் குத்தமிழ்
தந்தாய் தந்தாய் - மனம்
வைத்தும கிழ்ந்திடும் அன்பின ருக்கருள்
கண்டாய் கண்டாய்
கந்தவ னப்பொழில் காட்சியு கந்தனை
கந்தா கந்தா — உனைக்
கண்டுக ளிப்புட னுடிம கிழ்ந்திட
முந்தாய் முந்தாய்
தென்னிளஞ் சோலையி ருப்பைவி ரும்பிடு
சீராய் சீராய் — வலி
தெள்ளிதின் காட்டவத் தாருக னைக்கொலும்
வீரா வீரா
இன்னலி டைஞ்சலி டைந்திட வந்தருள்
தாராய் தாராய் - உம(து)
ஏற்றம்பு கந்தனம் ஏத்திவ ணங்கினம்
வாராய் வாராய்
அல்லல கற்றிய றத்துநி றுத்திடும்
அன்பா அன்பா — மலை
அஞ்சக்கு றத்தியை அள்ளிய ணைத்தவோர்
வம்பா வம்பா
நல்லவ கப்பொருள் நாடியு ணர்த்திய
வேலா வேலா — உளம்
நண்ணிவ ணங்கிவ ழுத்திட வேவழி
கோலாய் கோலாய்.

### 51. வஞ்சப்புகழ்ச்சி

(கலி விருத்தம்)

கோலமோ கேலியாம் கோடனூர் ஈரெனூர்
ஞாலமே போதுமோ நாடுதோ றேகினுன்
காலமே மேவுகார் கந்தவ னேசனும்
வேலனே தேவுசீர் மேவுதாள் பூணுவேன்

### 52. கார்

(கலித்துறை)

பூணென மீனினம் பொங்கவ ணிந்திடு வான்மீது
நீணெறி பற்றி நினைப்பென நீங்குவை நில்காரே!
நாணணி கொண்டவொர் நங்கை நயந்தனள் [நண்ணென்றே
மாணமர் கந்தவ னத்தவ னுக்குரை தந்தேகே.

### 53. முன்னிலைப் பரவல்

(கலி விருத்தம்)

கேளாத காதும் கிளவாத வாயுமெனத்
தாளாள உன்றாள் தழுவா திருந்துவிட்டேன்
நாளாகி உன்னை நயக்கின்றேன் என்றாலும்
ஆளாய் எனைக்கருதி ஆட்கொள்வாய் [கந்தவனம்.

### 54. பழிச்சினர் பணிதல் (முன்னிலைப் பரவலுமாம்)

(கீர்த்தனை)

கந்த வனமுருக – உனையே
கண்டு தொழவருக.
தென்னைம ரக்கனி சிந்திக்கி டந்திடும்
என்னைநி கர்த்தவர் ஏங்கிக்கி டந்திடும்

பொன்னைநி றைத்தவர் இன்பக்கி டங்கிடும்
உன்னைநி னைத்திரு கின்னேயு வந்திடும்

- கந்தவன....

பூவொடு தீம்பகை பொற்றொடி யார்தர
நாவொடு பல்லிசை நற்புல வோர்சொலக்
காவொடு புள்ளினம் கற்றுனை யேதொழத்
தீவொடு மாந்தர் சிறப்புரைப் பார்தரக்

- கந்தவன....

கள்ளத்த னக்கருங் கண்டகர் வென்றவா
வள்ளிக்கு றத்தியை வம்பில் மணந்தவா
தெள்ளித்தி ருத்தமிழ் சொல்லித்தி ளைத்தவா
வள்ளற்பெ ருங்கொடை புல்லக்க ளித்தவா

- கந்தவன....

அண்டர்மு னிக்கணம் அண்மிய ருள்பெறத்
தண்டமிட் டாரெமர் தாங்கிய ளித்திட
மூண்டிய தீமைமு றுக்கிய றுத்திடத்
தண்டமிழ் தன்பகை தாக்கிய ழித்திடக்

- கந்தவன....

ஏவுக ணைக்கினை யாதம யின்மிசை
தேவரி டுக்கணைத் தீர்த்தவொர் வேலொடும்
மேவுப யிர்ப்புடை மெல்லிடை யாரொடும்
காவல்கு றித்துனைக் கைதொழு வார்தொகக்

- கந்தவன ....

55. குறியிடம் கூறல்

(வஞ்சி விருத்தம்)

கனிதூ ங்கிடு வேலவன் கந்தவனம்
இனிதாகிய ஓடை இசைந்தவயல்
பனிதேங்கிடு செந்தளிர் மாமரமே
நனிதோய்ந்திடு பைங்கிளி நண்ணுமிடம்.

### 56. நிலவைப் பழித்தல்

(நேரிசைச் சிந்தியல் வெண்பா)

இடைந்து முகங்கோணி இன்முகவன் ளிக்கோ
உடந்தையாய்த் திங்கள் உறுத்தல் -
[கடம்பனுடைக்
கந்தவனம் காணுதே செல்.

### 57. தாய் இரங்கல்

(வஞ்சி விருத்தம்)

செல்வ னேநெடு வேலனே
இல்வ ளர்ந்தவள் என்னவோ
அல்வ ளர்ந்திடு கண்டுயில்
சொல்வள் கந்த வனப்புகழ்.

### 58. குறம்

(கலி விருத்தம்)

புகழ்முருகன் புணர்வதன்முன் புரிந்துகுறி
[சொன்னேன்
முகம்விரும்பி வள்ளியவள் முத்தமது தந்தாள்
அகம்விரும்பும் அழகுடைய அன்புமக ளேநீ
நகலுடைய கந்தவன நன்மலரே சூடும்.

### 59. ஊர்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சூடு வெண்கடம் போடு பொன்னகர் தோகை
[சூடினவன்
நாடு இன்றது நாண மங்கையர் நம்பி வாழிடமோ
வாடி விண்ணவர் வந்து வீழ்வது வள்ள லாம்முருகன்
கூடி நின்றருள் கூட்டி நிற்பது கொங்கார்
[கந்தவனம்.

## 60. வலைச்சியார்

(கலித்துறை

வனப்பார் நினதிரு விழிவலை வளைத்திட மானே
நினைப்பால் அழிகுவன் நெடிதுயிர் வருத்தினை
[பின்னும்
தினைப்பால் குறமகள் திருடிய குகனமர் கந்த
வனப்பால் வலையினைக் கடலிடம் பரப்பினை ஏனோ.

## 61. தழை

(கலி விருத்தம்)

ஏந்துங்கலன் எல்லாந்தவிர் வாளுக்கிவை என்னும்
நீந்துந்திரை நிற்கும்பொழில் நீள்கந்தவ னந்தான்
போந்துந்தழை கொய்துங்கவின் பூவும்பல கொண்டும்
மாந்துங்களி மானுக்கிவை வம்பாமெனும் வேலா.

## 62. முன்னிலைப் பரவல்

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

வேலவ னேயருள் வானவ னேயுற
மேவின னேமகிழ் கந்தவனம்
பாலவ னேர்மொழிப் பாவைய ரோபுகழ்
பாடின ரேமுனம் ஆடினரே
மாலவ னேர்மரு காமுரு காமனம்
வைத்துனை யேநனி வாழ்த்திடவே
மேலவ னேயெமை யாள்பவ னேபகை
மேய்ந்தவ னேயினி வந்திடுவாய்.

## 63. தோள் வகுப்பு

(பதினறு சீர் ஆசிர்ய விருத்தம்)

இடியெனு மொலியுடன் இடமிக வதிர
இலைத்தலை வேலை எடுத்துச் செகுப்பன

இளமையி லனையவர் இணைவுறு குரவை
இனித்திட வங்கை தொடுத்துக்
[குவிப்பன
கொடிபொர இடைவிழி கொலைசெய அணுகு
குறக்குல மங்கை அணைத்துக் குலைப்பன
குறுகிய வழிதவி குருவிகள் மகிழ்வு
கொளப்பயில் குன்று குமைத்துக்
[கடப்பன.
அடியவர் அமரரொ டணுகிட அருளி
அடைக்கலம் நன்மை அழைத்துக்
[கொடுப்பன
அழகிய தமிழினில் அறிதரு குமரம்
அனைத்துல குள்ள அமைத்துக் களிப்பன.
வடிதரு புனல்விழி வறுமையொ டிரவு
மனத்துறு மாசு மறித்துத் துடைப்பன
மலரினம் அணிசெய மயிலினம் அகவு
வளக்கொடை கந்த வனத்தனற்
[றேள்பல

## 64. பிச்சியார்
(வெண்டுறை)

பலபாடிப் பிச்சையெனப் பலிகொண்டு வீடுதொறும்
போகும் பாவாய்
இலையெனுமென் உயிர்போல இடைகொண்டாய்
[இருவிழிவேல் போதா தென்று
கலகலெனப் புள்படியும் கந்தவன முருகனின்வேல்
[கையில் கொண்டாய்
மலைமகளின் மகன்குரை மருட்டியமை போலணங்கே
அலமரவென் உயிர்குடித்தல் அறமோநீ அருள்வாயே.

### 65. குறம்
(பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்)

அலையு முடையும் மலையு முலையும் அழகும் அமையும்
[அமுதே
அழிவு முதலு மறியு மொருவன் அணையு
[மிளைய மயிலே
குலையும் அமரர் கொடியை முருகு குலவி மகிழு
[முனமே
குறியும் உதவு கொடையர் குறவர் குடியி
னினிய குயில்நான்
கலையும் உனது கவலை அரிய கனவு கனியும் மகளே
கரியன் மகளிர் கதறஉனது கவினை நுகரும்
[அளியோ
இலையும் அயிலும் இனியர் நினைவில் இயலும்
அயரும் இடமோ
எருவை கிளிகள் இரிய வலைகள் எறியும்
[முருக வனமே.

### 66. ஊசல்
(கலித்தாழிசை)

வஞ்சி மடநல்லீர் வாளார் விழியாடக்
கொஞ்சும் சிலம்பும் குழலும் குதித்தாட
மஞ்சனூர் கந்த வனமே மிகப்பாடி
அஞ்சொல் அணியிழையீர் ஆடுகபொன் னூசல்
அறிவன் திறப்பாட ஆடுகபொன் னூசல்.

### 67. வண்டு
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

சலிபெடை தனையே சரிசெயும் அளியே
சமரிடை உலவிய முருகன்

மெலியிடை இருவர் மிகுமணம் நுகரல்
மிகையென அறையினும் விடுவோம்
சிலிர்முகில் பரவு சிறுமதி யுடையேன்
செலும்வழி மறிசெயல் அழகோ
கலியறு புகழார் கந்தநல் வனமே
கடுகினை விடையது பகரே.

68. உருவெளிப்பாடு
(தரவுக் கொச்சகக் கலிப்பா)

பகலவனின் கொடுஞ்செயலால் பசைதவிர்ந்த [பாலையிது
நகலுடைய வேலவனின் நலமருளும் கந்தவனத்
துருகனியும் தாமரையும் ஒளிவீசும் சுயலினமும்
தகதகக்கும் மருட்கைநிலை தனிப்பாக அறிகிலேயோ.

69. ஊர்
(கலி விருத்தம்)

அடியவர் உறைகுவ தலைகயல் தருவது
கடிபொழி லுடையது கலையது கவினது
வடிதமி ழுறைவது மருளுறு பகையுக
முடிகுகன் உறைவது முருகநல் வனமதே.

70. கோலாட்டம்
(சிந்து)

தேடிப் பிடித்தவொர் செல்வமடி — சிவன்
சேர்ந்து படிக்குமொர் பள்ளியடி
நாடிப் புகழ்ந்திடும் தெய்வமடி - அவன்
நான்மறை மாற்றிய நல்லனடி.
கோலக் குறத்தியின் கொண்கனடி - அருள்
கோலக் கொடுத்திடு கொற்றனடி

மேலைத் திருத்தமிழ் வெற்புடையன் - சுடர்
வேலைப் பிடித்திடு வேந்தனடி.
கூடிக் குனிந்துநீ கோலடியே – வரு
கோடைக் குயிற்குலம் பாடமயில்
ஆடிக் களித்திடு கந்தவனம் – குகன்
ஆளக் கணித்துநீ கோலடியே.

71. மயில்விடு தூது
(வஞ்சி விருத்தம்)

கோடு மகிழும் மயிலே
வாடு மெனது நிலையே
கூடு குகனுக் குரையே
நாடு முருக வனமே.

72. தோழிவிடு தூது
(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

மேனாள் கண்டதொரு மீளா விண்கனவில்
மிலையா மதியூடு மீனும் விழியுகளும்
மானே கந்தவன மருங்கே ஒருதுறையில்
மணியார் கடனீர்நான் மகிழ்வால்
[விளையாடத்
தானே கந்தனவன் தனியே தழுவியவன்
தகவோ எனைப்பிரிதல் தமிழால் உரைபேசி
நானே மலர்மாலை நாணு தவற்சூட்ட
நலமார் தூதுரைக்க நடவாய்
[கைதொழுதேன்

73. புறநிலை வாழ்த்து
(கலி விருத்தம்)

தொழுதிட முருகனுந் தொடர்வது மயிலே
பழுதுறு பகையவர் படுவது மயிலே

வழுவறு முருகநல் வனமுள முருகே
அழுபவர் மிடியற அருள்வது முருகே.

### 74. முன்னிலைப் பரவல்
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

முன்றி ருப்புகழ் முற்றி நின்றவர்
முன்னு கந்தவ னத்திலே
உன்றி ருப்புகழ் பாடி வந்திட
ஓசை யங்கடல் தள்ளுவாய்
மன்று யர்ந்திட வாடு தந்தையின்
மால்த கைந்திடு நற்றவா
குன்றி ருந்திடு கோதை சூடிய
கொற்ற வாதமிழ் கற்றவா

### 75 புறநிலை வாழ்த்து
(குறள் வெண்பா)

கந்தவனம் பாடிக் கசிந்துருகச் செல்வமெலாம்
வந்தமரும் வாழ்ந்து மகிழ்:

### 76. மதங்கியார்
(கலி விருத்தம்)

மன்னும் குமரனை வணங்கு மதங்கி
கன்னற் சுவைதரு கந்தவ னத்தில்
மின்னற் பொருமிடை மெலியல
[பொன்வாள்
துன்னற் கரியன சுழல்தரும் உயிரே.

### 77. விழிநிலை
(வஞ்சி விருத்தம்)

உலகினர் துயருற உருகுவ
மலர்புரை மனைவியர் மருவுவ
அலமரு முனிவரை அருளுவ
நலக்குக வனத்தவன் விழிகளே.

## 78. திருவுலா
(பஃறொடை வெண்பா)

கந்த வனத்துக் கவிஞர் தமிழ்முருகன்
வந்துபட் டாடை வயங்க பயிலேறிப்
பக்கத் திரண்டு படர்ந்த கொடிதாவக்
கொற்றக்கை வேல்பற்றிக் கோழிக் கொடிபறக்க
முற்றத் திருந்து முழக்கத் தொடுசெல்லப்
பேதைகை நோக்கப் பெதும்பை முகம்பார்க்க
மங்கைதாள் காண மடந்தை விழிமோதப்
பட்டார் அரிவை பலஎண்ணப் பக்கத்துக்
கட்டார் தெரிவை கதிர்த்திட்ட தோள்நோக்கப்
பேரிளம் பெண்ணே பிரியா உயிர்தேடத்
தாரணிவார் வானத் தவர்.

## 79. சம்பிரதம்
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தடம்பொழில்சூழ் கந்தவனம் தகுமாயச் செயல் [புரிவன்
தடுத்தென்னை வெல்லு வீரோ
கடம்பனுடை வேல்நெஞ்சில் களிப்புடனே [செருகிடுவன்
கடலருள்நீர் பருகி வல்லி
உடம்புதலை வெட்டியுயிர்ப் பித்திடுவன் உளமுள்ளும்
உளவெல்லாம் எடுத்தார்த் தன்பு
நெடுங்குதலை நங்கையரின் நலங்காப்பேன் [இவையனைத்தும்
நகையாகும் இன்னும் செய்வேன்.

### 80. காமமிக்க கழிபடர் கிளவி
(கலி விருத்தம்)

வேலன் எமதிலம் வருமோ தருமோ
சோலை முருகநல் வனமே அனமே
மாலை வளர்தரும் மதியோ விதியோ
காலன் கயிறது படுமோ வுடுமோ.

### 81. பழிச்சினர் பணிதல்
(பதினாறு சீர்த் திருப்புகழ் ஆசிரிய விருத்தம்)

விட்டிலை யடுமகல் ஒத்திட வருபகை
வெட்டுற முகமலர் மிடலோனே
வெட்சிய குறமகள் வெட்டிய விழிமலர்
வெற்றியை அடைதர மெலிவோனே
கட்டிய பணமுடி விட்டெறி பவரொடு
கட்டிலில் உடல்பகர் கடையோரும்
கற்பெனு மெயிலினர் பொற்பற முயன்றவர்
கட்டழல் படவுயிர் கரிவோரும்
கொட்டிய உயர்பொருள் மட்டமும் விரவிடு
கொச்சக மதுபுரி கொடியோரும்
கொத்தைய பதவிநி லைத்திட அன்னபழி
குற்றமும் நனிபுரி கொலையோரும்
கட்டுடன் அழிபட நற்றவ ரொடுகடல்
கத்திட உனதிசை கடுகாயோ
கட்டுடை முருகவ னத்துறை குகதமிழ்
கற்றவர் தொழுதிடு கதிர்வேலா!

### 82. ஊர்
(அடிமறி மண்டிலடி வெளிவிருத்தம்)

கடலலை யோவெனக் காவடி ஆர்தரும் — கந்தவனம்
உடலலை நோயர் உயிர்மருந் தாமுயர் - சந்தவனம
அடலலை காதல் அவர்மணம் கூடிடும் — கந்தவனம்
குடலலை ஓர்தூயர் கொய்தவர் கூடிடம் — கந்தவனம்.

## 83. கிள்ளைவிடு தூது

(கலி விருத்தம்)

தழையே நுழைவாய் தமிழ்பயில் கிளியே
முழைவாழ் அரியாம் முருகநல் வனமே
விழைவோன் முருகோன் மிகவருள் தரவே
அழையாய் அழையாய் அயில்கனி தருவேன்.

## 84. நெஞ்சழிதல்

(வஞ்சிநிலைத் தாழிசை)

தந்துகனி தளிர்மரங்கள்
வந்துகொடி படரவளர்
கந்தவன முகந்தாற்கே
முந்துமென் மனனேகாண்.

வரும்பேடை மகிழவென
இருந்தோகை மயில்விரிக்கும்
முருகவன முடையாற்கே
உருகுமென் மனனேகாண்.

கதிர்எழவே மரைவிரியும்
புதுவரவார் பொலிகண்டி
முதியவன முருகோற்கே
வதியுமென் மனனேகாண்.

## 85. தவம்

(எழுசீர் ஆசிரிய விருத்தம் - திருப்புகழ் விருத்தமுமாம்)

மனமுருகு நிலைபெயர்வில் வளிகதிரும் மதியுமுள
வரன்முறையுள் அடங்கலுறும் வளராமல்
முனமுறுநள் மூக்கமரும் முதிர்ஒளியார் இருவிழிகள்
முருகவன முதிர்தழைகாய் கனிவாயோ
இனுமுட்டயும் முருகனிறம் இகில்மருட்கை சினமுமில
தினவுமெலி துயர்மகிழ்வு திளையாமல்

அனமூலவு களிறுகரு டனைவெருவு திருமுகப்பில்
அழகுகந்த வனமுனிவர் அமர்வாரே.

86. இயலிடம் கூறல்
(கலி விருத்தம்)

வார்கடல் வடகரையே வளர்தமிழ் தருதுறையே
கார்மகிழ் பொழிலிடமே கந்தநல் வனமயலே
ஆர்தரு மலர்மணமே அணிமயில் குகனுடைவேல்
ஏர்தரும் இருவிழியே எனையிடர் செய்தவையே.

87. இடைச்சியார்
(ஆசிரிய ஒத்தாழிசை)

தத்தித் தத்தித் தண்மோர் விற்க
வைத்து வைத்து வார்க்கும் பெண்ணாள்
கொத்திக் கொத்திக் கூராம் கண்கள்
தைத்துத் தாக்கும் கந்தக் கானே.
வீடு தோறும் பாலே கொண்டு
நாடி ஆண்கொல் நச்சுக் கூற்றம்
நீடு கண்ணில் பாசம் நீளச்
சாடி மாய்க்கும் கந்தக் கானே.
நெற்றுக் கொண்டு நெய்யை ஊற்றி
விற்கும் கன்னி வேலன் ஊர்தி
பொற்கண் ணயி ரத்தை வென்ற
விற்கண் வீசும் கந்தக் கானே.

88. மடக்கு
(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

கன்று வானுர சிக்குற வஞ்சி
காப்பன் யாம்வினை சிக்குற வஞ்சி
குன்று சூர்பகை கொண்டது கைத்தான்
கோதி லார்துயர் கொண்டது கைத்தான்

மன்று ளான்கரு தாமொழி தந்தான்
வானு ளார்சிறை தாமொழி தந்தான்
மன்ற லாரொடு கந்தவ னத்தான்
மன்றி ருத்தரு கந்தவ னத்தான்.

89. நெஞ்சொடு இளத்தல்
(கலி விருத்தம்)

கந்த வனத்தினில் சுற்றிக் கடுத்தனே
வெந்த மனக்குயில்! வெம்பித் தவித்திடல்!
நிந்தை வரக்குகன் நெல்லிக் கசப்பினன்
முந்தை உடற்றினும் முற்றின் புறத்தரும்.

90. மடல் விலக்கு
(எழுசீர் ஆசிரியச் சந்த விருத்தம்)

உருவிற் குறையற் றறிவிற் புரையற்
றவள்ளிற் புருவத் தடுகண்ணல்
எரியுற் றழிவுற் றிடலிற் கரியுற்
றிடுமப் பனைநற் கறுக்கூர்தல்
புரிவுற் றிடுகொற் றவவிட் டிடுமப்
பொருவற் றவளைக் கொலும்நாணம்
தெரிவுற் றனர்பெற் றவரொத் துளர்சொற்
றிளைகந் தவனத் தருள்வாழ்க.

91. தோழி, வெறியாடும் வேலனை இகழ்ந்து அறத்தொடு நிற்றல்
(வெள்ளொத்தாழிசை)

கட்குடித்தான் தீமை கரும்பனைமேல் ஏற்றுதல்போல்
பட்டுடல்துன் பிற்குப் படைகுகனைச் சொல்வேலா
குட்டுடையாய் வாழ்க குளிர்ந்து.

நஞ்சுண் டவள்துயர்க்கு நல்லவரைக் காட்டுதல்போல்
அஞ்சொலாள் இன்னற் கணிமுருகைச் சொல்வேலா
நெஞ்சுவந்தோம் வாழ்க நிலைத்து.

ஞாலத் திருள்பாடிய நாகத்தைச் சொல்வதுபோல்
மாலைநையல் கந்த வனத்தவனால் என்வேலா
கால்பணிவோம் வாழ்க களித்து.

### 92. வாழ்த்தியல் — ஊர்
(வஞ்சிப்பா)

கடியார்பொழில் மயிலாடிட
இடியார்தர மழைமேவிடும்
கொடியார்மலர் அளியார்தரத்
தடிவேட்டுவன் பிடிவாடிடும்
வளர்தாமரை முகம்கூம்பிட
மகிழாம்பலம் மதிநோக்கிடும்
மடவார்விழி யொடுமோதிட
வயலார்கயல் நிரைதாவிடும்
மடியாவிர வொடுமாப்பகல்
அடியார்குழு அடிபோற்றிடும்
பிணியாருடற் பிணிவீட்டிட
அணைவார்தமக் கருள்காட்டிடும்
இனைய,
கந்தவ னத்தினில் களிக்கும்
செந்தமிழ் முருகன் சீறடி தொழுமே.

### 93. நிலவைப் பழித்தல்
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தொடியினம் நெகிழத் துகிலுடை யவிழத்
தொழுதகை பிரிய அழுவேனுன்
கடலொடு கதறக் கருவிழி யொடுபுல்
கதுவுமுத் துறைய மகிழ்வாயோ
உடலுயிர் இலையால் உறுமணல் துறுகல்
உறவினை உணர்வில் நிலவேநீ
அடலுடை முருக வனமுறு குகனமுன்
அறைகுவன் இகனை அறிவாயே.

### 94. காலம்
(ஆசிரிய நேர்த்துறை)

வானமழை தாக்கவுயிர் வாடுகிற காலம்
வாழைமல ரொடுகொங்கை வம்புவிளை காலம்
கானமகள் பூத்தரிய காட்சிதரு காலம்
கந்தவனம் முருகனுக்குக் கவின்காட்டும் காலம்
தேனரும்பு முல்லையவன் சிரிக்கின்ற கால்உள்ளம்
கோனினிய மார்பணைந்து கூடவிழை காலம்
கொம்பொரிடம் கொடியொரிடம் ஆனகொடுங்
[காலம்.

### 95. மறவர் மணம் நேர்தல்
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கொஞ்சிடு குலமகள் கொண்டிட விழைவுறு
கோனவன் தகுதிகள் கொண்டவனே
மஞ்சிடு மழைவளர் கந்தநல் வனமது
வந்துகை தொழுவது வல்லவனே
மிஞ்சுறு மறமதில் மென்றமிழ் தருசுவை
வேட்டிடு புகழினில் வென்றவனே
அஞ்சுற விலைநும தங்குயில் தருகென
அண்டினை உளவெனில் அருள்வேனே.

### 96. நெஞ்சொடு கிளத்தல்
(அடிமறி மண்டில ஆசிரியப்பா)

அழகன் தாள்தலை அணிதர மகிழே
தொழுதவன் புகழே சொலவிழை வுறுமே
பழுதற முருகைப் பருகிடு மனமே
வழிபெறக் கந்த வனம்பணிந் திடுமே.

### 97. மணவணி வேண்டல்
(இன்னிசை வெண்பா)

இத்தித்தெம் உள்ளம் இரிகின்ற வேலவனே!
எத்திக்கும் போற்றும் இறையோனே நின்னைப்

பணிந்து முருகவனம் பாடிமகிழ் கொம்புக்(கு)
அணிமணம்வேண் டிட்டோம் அருள்.

98. முன்னிலைப் பரவல்
(இணைக்குறள் ஆசிரியப்பா)

அருளும் திருவும் அணியிழை மகளிர்
மருளறும் அறிவோ வளர்சுடர் நெடுவேல்
ஊக்கமும் உரனும் தூக்கிடு கொடிமயில்
மூவிரு முகமும் அறுபெருஞ்சமயம்
ஆகக் கொண்டிடும் அரும்பெறற் புகழோய்!
வானவர் தலைவ ஏனையர் முதலே
தேனமர் கடம்பு இலைத்திடு தோளாய்
தாருகன் முடித்துச் சூரனை வதைத்தோய்
காரிருட் பகைகள் கடிந்தவொர் விளக்கே
இமயத் துச்சியில் அமைவுறத் தோன்றும்
பொறிபடு நெருப்பே புனல்படு புணையே
அறிதமிழ்ப் புலவ செறிவுடை அறிஞ
குறத்திம ணாள அறச்செய லாளா
மதுரையின் மன்ன விதியினை வென்றோய்
முதற்பெரும் பொருளின் நுதல்விழி
[முளைத்தோய்
குழவி உருவோய் குலவிப்பருந் திறலோய்
அழகா செவ்வேள் அறுபடை கொண்டோய்
குமரா பெரும அமரா அறிவா
கந்தநல் வனமுறை கந்தா குகனே
தந்தாய் நினைறன துளிரடி போற்றி
உறுதுயர் விளைத்திடும் தீய
வறுநிலை மாற்றும் வெறுக்கையே போற்றி
பற்றினை அகற்றிடு பண்பால்
உற்றபல் துன்பம் ஒழித்தனை போற்றி
மயக்கது மாற்றினை யதனால்
வியக்கறி வொளியினை விளைத்தனை போற்றி
கலைநலம் மகிழ்ந்தனை எனவே

உலேவிலா இன்பம் உடற்றினை போற்றி
குறிஞ்சியின் தலைவனீ அதனால்
நிறைவுறு கூடல் நிகழ்த்தினை போற்றி
அறவுளம் அளித்தனை போற்றி
அன்ப போற்றி
இன்ப போற்றி
மன்பதை வாழ மகிழ்வோய் போற்றி
எனவாங்கு
ஏற்று மனதில் ஏத்தியின் தமிழால்
நூற்றியாப் பவற்றால் போற்றியாம் பாட
மயில்மிசை வந்து மகிழ்வுடனே
அயிலுடை முருக அருளுக சிறந்தே.

99. செவியறிவுறூஉ
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சிற்றறி வுற்றவர் முற்றறி வுற்றிட நற்றமிழ்
[கற்றிடுவீர்
எற்றிடு செற்றமும் ஒட்டிடு பற்றொடு குற்றம
[கற்றிடுவீர்
இற்றைகை பொற்புற அற்புறம் நிற்புற முட்டிட
[ரற்றிடுவீர்
நெற்றின முற்றிய கந்தவ னத்திறை கொற்றமு
[ரற்றிடுவீர்.

100. ஒன்படை
(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

உறவாய்மகிழ் இயற்கைக்கவின் உருவாய்உயர்
[பொருளாய்
உணர்வோர்உள மலரிற்சுடர் ஒளியாய்விரி
[வெளியாய்க்
குறமாமகள் உயிராமுரு கனையேபொரு ளெனவே
கொடுகந்தவ னப்பேர்க்கலம் பகமேதமிழ் குலவத்
திறமாயமை தருவேன்வளர் திருவேங்கட ராமன்
திகழ்பாமுறை பயிர்வோர்மிகு திரையார்கட லுலகில்
புறமார்புகழ் பொலிவார்திரு புணர்வாள்வள முறவே
புனமாமயில் வருவோனருள் புரிவானலம் மருவும்.

# பாடல் முதற்குறிப்பகர நிரல்.


| | பாடலெண் |
|---|---|
| அடியவர் | 69 |
| அடியார்குழுவே | 40 |
| அடியினில் | 19 |
| அணைவுறு | 30 |
| அருளாளயர் | 41 |
| அருளும் திருவும் | 98 |
| அலையுமுடையும் | 65 |
| அழகன்தாள் | 96 |
| அமரா | 100 |
| ஆய்தரும் தமிழின் | 13 |
| ஆருயிர்க்கு | 38 |
| இடியெனும் | 63 |
| இடைந்து | 56 |
| இன்றுளன் | 16 |
| உயர்பரங் | 3 |
| உயிர்பீடுற | 10 |
| உருவிற் | 90 |
| உலகவிர் | 24 |
| உலகினர் | 77 |
| ஊசுகின்ற | 8 |
| எம்மகள் | 25 |
| ஏந்துங்கலன் | 61 |
| கடலலையோ | 82 |
| கடியார்பொழில் | 92 |
| கட்குடித்தான் | 91 |
| கந்தவனத்தினில் | 89 |
| கந்தவனத்துக் கடவுள் | 36 |
| கந்தவனத்துக் கவிஞர் | 78 |
| கந்தவனமுருக | 54 |
| கந்தவனம்பாடி | 75 |
| கனிதூங்கிடு | 55 |
| கன்றுவான் | 88 |
| கன்னங்கரிய | 20 |
| கும்மிருட்டு | 46 |

| | பாடலெண் |
|---|---|
| கேளாத | 53 |
| கொஞ்சிடு | 95 |
| கோடுமகிழும் | 71 |
| கோலமோ | 51 |
| சலிபெடை | 67 |
| சிற்றறி | 99 |
| சினவுருவொடு | 6 |
| சூடுவெண் | 59 |
| தடம்பொழில் | 79 |
| தத்தித் | 87 |
| தந்துச்னி | 84 |
| தரத்தரத் | 44 |
| தரவரு | 32 |
| தவந்தழைத்திடு | 35 |
| தழையே | 83 |
| தாரும் கடம்பது | 39 |
| தாலேலேலோ | 22 |
| தானமர்கந்த | 43 |
| தானேயாய் | 12 |
| திண்மைகொண்ட | 47 |
| தித்தித்தெம் | 97 |
| தேடிப்பிடித்த | 70 |
| தேன்விரும்பு | 34 |
| தொடியினம் | 93 |
| தொழுதிட | 73 |
| தொழுதிமகிழ் | 29 |
| தோயும் | 2 |
| தோளார் | 31 |
| நீகந்தவனத்து | 23 |
| நீக்குவாய்நீ | 26 |
| நின்றபல | 14 |
| பகலவனின் | 68 |
| பலபாடிப் | 64 |
| பற்றூர்புரம் | 42 |

| | |
|---|---|
| பார்த்திடும்ப்பா | 49 |
| பாவாய்தரு | 28 |
| பான்முகங்கள் | 18 |
| புகழ்முருகன் | 58 |
| புரிகுழலும் | 7 |
| புரியவிழா | 33 |
| பூணென | 52 |
| போமிளமை | 17 |
| மருவுமலே | 1 |
| மனமுருகு | 85 |
| மன்னும் குமரனே | 76 |
| மின்னேதேனே | 37 |
| முன்றிருப்புகழ் | 74 |
| மேஞன் | 72 |
| வஞ்சிமட | 66 |
| வந்து பணிந்த | 50 |
| வருமுகில் | 15 |
| வனப்பார் | 60 |
| வாயணி | 5 |
| வாயேதிறவாய் | 21 |
| வாய்மறந்து | 45 |
| வார்கடல் | 86 |
| வாழ்த்தி வரவேற்று | 27 |
| வானமழை | 94 |
| விட்டிலே | 81 |
| விட்டுச்சுடர் | 48 |
| வித்துப்பொரும் | 11 |
| வேலனேயருள் | 62 |
| வேலனெமதிலம் | 80 |
| வேலன்வரும் | 4 |
| வேலிமின் | 9 |